★★★

12 பக்கங்கள் | விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ ot the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 12-11-1978 | இதழ் — 9

புனித ராஜ்யம்

கலைஞர் கருணாநிதி

காட்சி 13-(தொடர்ச்சி)

(சுந்தரி குளியல் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டதும் பாலம்மாள் ஏற்கனவே அறைக்குள் இருக்கிற அண்ணச்சியையும் நொண்டியையும் கை ஜாடை மூலம்வெளியே அழைக்கிருள். அவர்கள் இருவரும் தள்ளாடிய நிலையில் வருகிருர்கள்.)

பாலம்மாள்; உங்களுக்கு மாங்கனி கொடுக்கலாம்னு இருந்தேன். ரொம்ப ருசியான பலாக் கனியே வந்திருக்கு.

நொண்டி: நாங்க என்ன விருந்து சாப்பிடவா இங்க வந்திருக்கோம்?...

பாலம்மா: நீங்க சாப்பிட வந்த விருந்தைப் பத்திதான் சொல்றேன். நான் எதிர்பார்த்தவளுங்க ரெண்டு பேரும் வரலே! அதுக்குப் பதிலா உங்களுக்கு ஒரு புது விருந்து கொடுக்கப் போறேன். அதாவது எங்க ஊர்ல இருந்து என் சொந்தக்காரக் குட்டிவந்திருக்கா: இதுவரையில ஆம்பளே முகத்தையே பார்த்தது கிடையாது ..

அண்ணச்சி: இந்த மாதிரி வீடுகள்ளே இந்தபாஷை பேசாத கிழவிகளேகிடையாதுப்பா!

பாலம்மா: உஸ்! சத்தம் போட்டுப் பேசாதீங்க... இப்படி வாங்க! மெதுவாப்பேசித் தொலேங்க...

[கூடத்தின் ஒருமூலேயில் போய் நின்று கொண்டு மூவரும் பேசுகிருர்கள்]

நொண்டி: பாலம்மா!என்ன சொல்றே சொல்லு!

பாலம்மா: அவ இதுக்கு லேசிலேஇணங்கமாட்டா. எல்லாம் உங்க சாமர்த்தியத்திலேதான் இருக்கு. நான் வெளியில போயி இருக்கேன். நீங்க வீட்டுக் கதவை தாழ்ப்பாள் போட்டுக்கிங்க. அவ உள்ளே குளிச்சுக்கிட்டு இருக்கா. அவ வந்தவுடனே அவகிட்டகுளிர்ச்சியா பேசி, நீங்க வந்த விவகாரத்தை முடிச்சுக் கிங்க...

நொண்டி: அவ ஏதாச்சும் முரண்டினன்ன...

பாலம்மா: அ தல்லாம் முரண்டமாட்டா!

அண்ணச்சி: அப்பறம்... சினிமா நாடகத்திலே பார்க்கிற மாதிரி கற்பழிக்கிற காட்சி, வில்லன் விரட்டுறது, அந்தப் பொம்பளே கையில கிடைக்கிற நாற்காலி, ஸ்டூலு. கூஜா, குடம் எல்லாத்தியும் எடுத்து அடிக்கிறது...அதுமாதிரி ஏதாச்சும் ஆயிடப் போவுது .

நொண்டி: சினிமா, நாடகத்தில அதுமாதிரிகாட்சியிலே ஒரு ஆம்பளேதான் —இப்ப நம்ப ரெண்டு ஆம்பளே இருக்கிறோம்... பயப்படாதிங்க அண்ணச்சி!.. அயிட்டம் புதுசுங்கிறபோது அதை விடலாமா அசட்டுத்தனமா?

அண்ணச்சி: அப்ப சரி பாலம்மா-நாங்க கதவை தாப்பாள் போட்டுக்கிறோம். அதோட நீயும் வெளியில போயி வீட்டைப்பூட்டிக்கினு தெருத் திண்ணையிலேயே உக்காந்துக்க! இல்லாட்டி அந்த குட்டி தாப்பாளேத் திறந்துகிட்டு ஓடிட்டா என்ன செய்றது? எங்க பணம்லே போயிடும்.

பாலம்மா: ஆமா, ஆமா! அதுவும் நல்ல யோசனே தான்...

நொண்டி: எங்க அண்ணச்சி மூளேயிலே புரட்சிகரமான திட்டங்கள் எல்லாம் முளேக்கும் மூளேயா அது? சூளேயில வச்சா கூட வேகாதே!...

பாலம்மா: சரி! சரி! நேரமாகுது — இந்நேரம் குளிச்சிருப்பா!... பணத்தை எடுங்க...

அண்ணச்சி: பணத்தைஅவ கிட்டதானே கொடுக்கணும்?

நொண்டி: என்ன அண்ணச்சி உளறிகிட்டு! ..கடையில ஒரு சாமான் வாங்கப் போனபணத்தைசாமானு கிட்டயா கொடுக்கிறோம்? வியாபாரிகிட்ட தானே கொடுக்கிறோம்... பாலம்மா கிட்டேயே கொடுங்க...

அண்ணச்சி: எவ்வளவு வேணும்?...

பாலம்மா: முதல் முதல்ல நீங்கதான் ருசி பாக்கப் போறீங்க!... ஒரு ஆயிரத்தை எடுத்துக் கொடுங்களேன்.

அண்ணச்சி ஆயிரமா?...

பாலம்மா: சீக்கிரம்— சீக்கிரம்... அப்பறம் நம்ப திட்டமெல்லாம் பாழாயிடும்...

நொண்டி: பணம் கிடக்குன்னே பணம்... நம்ப வியாபாரத்திலே ஆயிரம் ரெண்டாயிரம் எல்லாம் தண்ணிபட்ட பாடு...

அண்ணச்சி:ஏய்... நீஎன்ன தாராளமாப் பேசுறே? உனக்கு ஏதாச்சும் கமிஷன் உண்டா?...

நொண்டி: என்ன அண்ணச்சி, இவ்வளவு நாளு பழகி இப்படி கேட்டுட்டிங்க... உங்களுக்காக உயிரை விடுவேன்... எடுத்துக் கொடுங்க... இளஞ்சிட்டு கைபடாத ரோஜா... பதினறு வயதினிலே...

(அண்ணச்சி, ஆயிரம் ரூபாய் கத்தை கரன்சியாக எடுத்து பாலம்மாவிடம் கொடுக்கிருன். பாலம்மாள் அந்தப் பணத்தைக் கண்களில் ஒத்திக் கொண்டே ''ஈஸ்வரா!' என்று பக்தியுடன் முணுமுணுக்கிருள். பிறகு அலமாரியில் இருந்து பூட்டு சாவியை எடுத்துக் கொண்டு)

பாலம்மா: நான் வெளியில போயி கதவைப் பூட்டிக்கிறேன். நீங்க உள் கதவை தாப்பாள் போட்டுக்கிங்க.

(என்று கூறிவிட்டு கையிலுள்ள பணத்தை மடியில் வைத்துக் கட்டிக்கொண்டு, பூட்டு சாவியுடன் வெளியே சென்று கதவை முடிக் கொள்கிருள்)

அண்ணச்சி: நொண்டி! இதான் பாத்ருமா?...

நொண்டி: பாத்தா அப்படித்தான் தெரியுது...

அண்ணச்சி: மேலே ஒரு சின்ன ஜன்னல் இருக்கு.

(12-ம் பக்கம் பார்க்க)



மாண்புமிகு முதல்வர்

மரபை மீறலாமா?

சா. கணேசன்

தமிழ் நாட்டின் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் மேலை நாடுகளைச்சுற்றிப் பார்க்கப் பயணம் மேற்கொண்டிருக்கிறார், ஐந்து வார காலத்திற்கு.

அந்தப்பயணம்சிலநாடுகளில் அதிகாரபூர்வமாகவும்சிலநாடுகளில் தனிப்பட்ட முறையிலும் இருக்கும் என்று தெரிவித்திருக்கிறார். தாம் செல்லும் பயணம் நாட்டு முன்னேற்றத்தைப் பற்றியேஇருக்கும் என்று குறிப்பிடுகிற நடிகர், சொந்தப் பிரச்சினையாகவும் சில நாட்கள் அமெரிக்காவில் தங்கப் போவதாக அறிவித்திருக்கிறார்.

இரட்டை மனிதராகத் திரைப்படங்களில் இதுவரை நடித்து வந்தவர், ஆட்சியிலும் இரட்டை வேடத்தை விட்டுவிடத் தயாராக இல்லை

“நாளை உலகை ஆளவேண்டும் உழைக்கும் கரங்களே”— என்ற உணர்ச்சிமிக்க பாடலுக்கு அவர் உதடுகளை அசைக்கிறபோது திரை அரங்கமே அதிர்கிறது.

ரசிகர்கள் கைகொட்டி ஆரவாரம் செய்கின்ற காரணத்தால், அதிலே எவருக்கும் பொறுமையும் இருக்க முடியாது. பொச்சரிப்பும் இருக்க நியாயமில்லை.

உரிமைக்காகப் போராடுகின்ற தொழிலாளர்களை ஊர்வலமாக வரும்போது தமிழக அரசு அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு தடிகொண்டு தாக்கியிருக்கிறது,

தங்களுடையநியாயங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூற நடை பாதையிலே உண்ணுநோன்பு மேற்கொண்ட தொழிலாளத் தோழர்களை ஆளும் கட்சி அடியாட்கள் தாக்கியதோடு பந்தலுக்கும் தீயிட்டிருக்கிறார்கள்.

காவல்துறை அதிகாரிகளோ கை கட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்திருக்கிறார்கள்.

இந்த வேதனைகளைத் தாங்கிக்கொண்ட தொழிலாளர்களை அதனுடைய தலைவர்களை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல சிறையிலே பூட்டி சிந்தை மகிழ்ந்திருக்கிறார் எம். ஜி. இராமச்சந்திரன்

உழைக்கும் வர்க்கத்திற்காக முதலைக் கண்ணீர் வடிக்கிறார் இன்றைய முதல்வர்.

போராடிக்கொண்டிருக்கிற தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகள் வெற்றிபெற அரசியல் கட்சிகளைநாடுவது அப்படி ஒன்றும் பாபமான காரியமல்ல. கடந்த காலங்களில்கூட எதிர்க் கட்சிகளின் ஆதரவை நாடிய சம்பவங்கள் நிரம்ப உண்டு.

அந்த முறையிலேதான் இந்த நேரத்திலும் தொழிலாளத் தோழர்கள் எதிர்க் கட்சிகளை ஒன்றரண்டு நீங்கலாக அணுகியிருக்கிறார்கள் ஆதரவைத் தேடியிருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினையில் தொழிலாள வர்க்கத்தின் தோழனாக விளங்கிவரும் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் என்றும்போல் உதவிட முன்வந்திருக்கிறார்.

தொழிற்சங்க உலகில் இரண்டறக்கலந்திருக்கும்தோழர்கல்யாணசுந்தரமும், வி. பி. சிந்தனும் கழகத்தின் ஆதரவை; கலைஞரின் துணையை நாடிப் பெற்றிருக்கிறார்கள்; இது நாடறிந்த உண்மை;

தொழிலாளர்களின் உரிமையைக் காக்க வேண்டும். நியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற வேண்டும், அதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். ஆளும்கட்சிக்குண்டர்களின் அராஜகம் ஒழிய வேண்டும்; போலீசார் அத்துமீறல் அடியோடு தடுக்கப்பட வேண்டும்.

இவற்றினை எண்ணியே சர்வ கட்சிக்குழு ‘பந்த்’ நடத்திட முடிவெடுத்தது. திட்டமிட்டபடி அக்டோபர் 23 ஆம் நாள் நாட்டில் வேலைநிறுத்தம் வெற்றி அடைந்தது கடையடைப்பு மக்கள் களிப்ர்டையத்தக்க விதத்தில்நடைபெற்றது.

எதிர்க்கட்சிகளின் இந்த அமைதியான ‘அறப்போர்’ ஆளுங்கட்சிக்கு ஆத்திரத்தை மூட்டியிருக்கிறது. அதன்விளைவாக எதிர்க்கட்சித் தோழர்களை, தொழிலாள நண்பர்களை கண்டஇடங்களில் ஆளும் கட்சிக் கூலிப்படைகள் குருதி கொட்டக் கொட்ட தாக்கியிருக்கிறது, காவல்துறையினரும் இந்தப் புனிதப் பணியில் தங்கள் கைவரிசையைக் காட்டத் தவறவில்லை. கண்மூடித்தனமாகவே நடந்துகொண்டது; அவர்களின் ஆணையை அப்படியே நிறைவேற்றிக் காட்டிவிட்டது.

கருணையே வடிவான முதலமைச்சர் அடிபட்டதோழர்கள் மீதே வழக்குப் போட்டு சிறையிலே தள்ளியிருக்கிறார்.

நினைத்ததை முடிப்பேன் என்று ஆணவக் குரலோடு தொழிலாளர்களிடத்தில் வீர வசனம் பேசிப்பார்க்கிறார்.

கடந்த காலவரலாற்றைத் திரும்பிப் பார்க்கிறோம். ஆணவக் குரல் கொடுத்தோரெல்லாம் அழிந்துவிட்டதை; ஆழந்தெரியாமல் புதைந்துவிட்டதைத்தான் நாடு கண்டிருக்கிறது.

தொழிலாளர்கள் சிறையிலே கண்ணீர் சிந்தியபடி இருக்க, ரசிகர்களின் மாலைகள் சுமந்த தோள்களோடு ஆனந்தக் கண்ணீர் உகுத்தபடி அயல்நாடு புறப்பட்டிருக்கிறார். அ. தி. மு. க.வின் தலைவர்; தமிழகத்தின் முதல்வர்.

இலண்டன் நகரை அடைந்த நடிகர் இராமச்சந்திரனுக்கு வரவேற்பு ஒன்று காத்துக்கொண்டிருந்தது. பட்டணத்தைப் பார்க்க வந்த பட்டிக்காட்டானைப் போல் இலண்டன் மாநகரைச் சுற்றிப் பார்க்க வந்தவர்தான் முதல்வர்.

இலண்டன் தமிழ்ச் சங்கம் பாரதீய வித்யா பவனில் வரவேற்புக்கு ஏற்பாடுசெய்திருந்தது. ஐம்பது பேர்களே அந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தனர். ஏமாற்றத்தைச் சந்தித்தால் எப்போதுமே எம். ஜி. ஆர். தாங்கமாட்டார். என்ன செய்வது அருப்புக்கோட்டை மக்களா அங்கும் நிறைந்து இருக்க முடியும்?

சட்டத்தையும், ஒழுங்கையும் காற்றிலே பறக்கவிட்டவர் அடக்கு முறையைக்கட்டவிழ்த்து விட்டவர், அராஜகத்தை அனுமதித்துவிட்டவர் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களைச்சிறையிலேஅடைத்துவிட்டவர். அநீதிகளை தினமும் ஆட்சியிலேநடத்திக்கொண்டிருப்பவர் ஜனநாயகத்தின் ஜென்மப் பகையான சர்வாதிகாரத்துக்கு வெண்சாமரம் வீசியவர். இவருக்குவரவேற்பு அல்ல; வெறுப்பைக் காண்பிக்க வேதனையை வெளிப்படுத்த கறுப்புக்கொடிகாட்டினர். ஒருவரல்ல இருவரல்ல நூற்றுக்கணக்கானவர்தனிநபரல்ல இந்தக் காரியத்தை ஒரு இயக்கமே நடத்திக் காட்டியது, ஆம்! தமிழர் முன்னேற்றக் கழகம் எனும் இயக்கமே அது. மார்க்சிஸ்ட் பத்திரிகையான ‘மிலிட்டன்’ துணை ஆசிரியர் பாபுலா பி என்பவரும் கறுப்புக்கொடி காட்டுவதில் தன்கடமையைச் செய்திருக்கிறார். தொழிலாளத் தோழர்களும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

கறுப்புக்கொடி காட்டியதோடு விடவில்லை. கண்டனக் கடிதத்தையும் அவர் கையிலே கொடுத்தனர்.

“சிறையிலே அடைத்த தொழிலாளர்களை விடுதலை செய்யவேண்டும் அவர்கள்மீது அநியாயமாகபோட்டவழக்குகளை திரும்பப்பெறவேண்டும். அநீதி ஆட்சி நடத்தும் நீங்கள் ஆட்சியிலே இருந்து விலக வேண்டும்” இதுவே கண்டனக் கடிதத்தின் உள்ளடக்கம்.

வரவேற்பில் பேசிய எம். ஜி. இராமச்சந்திரன் வாடிக்கையான போக்கை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. நாட்டில் நடக்கின்ற குழப்பங்களுக்கெல்லாம் கலைஞர்தான் காரணம் என்று கண்மூடித்தனமாக உளறியிருக்கிறார்.

இலண்டன் மாநகரில் நிருபர்களுக்குப் பேட்டி ஒன்று அளித்திருக்கிறார். அரசிடம் அனுமதி பெற்று மதுவைக் குடிக்கவில்லை என்பதற்காக இல்லத்தில் உறங்கியிருந்த ஒருவரைஎழுப்பி கைது செய்த முதல்வர் சட்டத்தின் முன்னாலே எல்லோரும்சமம் என்று வாதாடியிருக்கிறார். பழிவாங்

(தொடர்ச்சி 11ம்-பக்கம்)



குஸ்திக்கு அழைக்கிறார் உகாண்டாவின் கோமாளி.

உகாண்டா அதிபர் இடிஅமீன் பெயரைக் கேட்டதுமே அவருடைய பல கோமாளித்தனங்கள் நினைவுக்கு வரும். அண்மையில் அவர் விடுத்திருக்கும் ‘சவால்’ எல்லாக் கோமாளித்தனங்களையும் தூக்கி அடிப்பதுபோல் இருக்கிறது.

டான்சானியா என்ற நாடுஉகாண்டாவுக்குப் பக்கத்தில் உள்ளது. இவ்விரு நாடுகளுக்கும் இடையே இப்போது எல்லைப் பிரச்சினை தோன்றியுள்ளது. இதைத் தீர்த்து வைக்க இடிஅமீன் ஐக்கிய நாடுகளின் மன்றத்தையோ, வேறு நாட்டையோ ‘நடுவராக’ அழைக்கவில்லை.

மாறாக—

வழக்கமபோலவே ‘அபூர்வமான’ ஒரு யோசனையை வழங்கியுள்ளார். இம் மாதிரியான யோசனை இடிஅமீனின் மண்டையிலிருந்து மட்டுமே கிளம்ப முடியும்.

அதாவது—

அவரும், டான்சானியா குடியரசுத் தலைவரான ஜூலியஸ் நைரோபியும் ‘குஸ்தி’ போட வேண்டியது; ‘குஸ்தி’யில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர் கோருவதை தோல்வி அடைந்தவர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஜூலியஸ் நைரோபி தன்னைப்போல் நெடிதுயர்ந்து, ‘கொழுத்தவராக’ இல்லாமல் மெலிந்திருப்பதால் அவருக்கு ஒரு சலுகை அளித்துள்ளார் இடிஅமீன். அதன்படி அமீன் ஒரு கையைப் பின்னால் கட்டிக் கொண்டும், இரண்டு காலிலும் கனமான பொருட்களைப் பிணைத்துக் கொண்டும் ‘குஸ்தி’ போடுவார்.

— உலகம் இதுவரை கேட்டிராத இந்த ‘உன்னதமான’ யோசனையைத் தொலைபேசி மூலம் ஜூலியஸ் நைரோபிக்குத் தெரிவித்துள்ளார், உலகப் புகழ்பெற்ற கோமாளியான இடிஅமீன்!

தமிழகம் கண்ட நவம்பர் புரட்சி!

1917-ஆம் ஆண்டு இரஷ்யாவில் நடைபெற்ற புரட்சியை நவம்பர் புரட்சி' என்ற பெயரில் ஆண்டு தோறும் கொண்டாடுகிருர்கள்.

உண்மையான சமதர்ம இயக்கமான திராவிட இயக்கத்தைச் சேர்ந்த நாமும், அந்தப் புரட்சி நாளை ஏற்றிப் போற்றி எழுதுகிருேம்! பேசுகிருேம்!

பேரறிஞர் அண்ணு அவர்கள் 'திராவிட நாடு' இதழ் நடத்திய காலத்தில், ஆண்டு தோறும் 'நவம்பர் புரட்சி' மலர் வெளியிட்டு, அந்தப் புரட்சியின் அருமை பெருமைகளையெல்லாம் நமக்குக் கட்டுரைகளாக வடித்துத் தந்திருக்கிருர்கள்.

இரஷ்யாவில் நடைபெற்ற அந்த நவம்பர் புரட்சி, உலகில் 'பொதுவுடைப் பூங்கா'க்கள் அமைய முன்னேடியாக அமைந்தது என்பதால் முற்போக்கு எண்ணம் படைத்தவர்களெல்லாம் அந்தப் புரட்சியை வரவேற்றனர்.

'ஆகா என்று எழுந்தது பார் யுகப்புரட்சி' என்று தேசிய கவி பாரதி கூட அன்று பாடிக் களித்தார். இரஷ்யாவில் புரட்சி நடைபெற்ற அதேகாலத்தில், தமிழ் நாட்டிலும்ஒரு 'புரட்சி' நடை பெற்றது என்ருல், பலருக்கு வியப்பாக இருக்கும்.

இரஷ்யாவில் நடைபெற்றது அரசியல் புரட்சி என்ருல், தமிழ் நாட்டில்—தென்னிந்தியாவில் என்றே கொல்லலாம்—நடைபெற்றது ஒரு சமுதாயப் புரட்சியாகும்.

சமுதாயத்தில் சாதியின் பேரால் ஏற்றத் தாழ்வுகள் நிலவுவது ஆண்டவனுல் ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடு என்றும், அவரவர் 'தலைவிதி'ப் படியே எல்லாம் நடக்கிறது என்றும் நம்பிக்கொண்டிருந்த மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி, அடித்தளத்து மக்களும் சமுதாயத்தில் எல்லா உரிமைகளையும் பெற்று உயர்ந்த நிலையெய்த முடியும் என்பதை எடுத்துரைத்து, அவர்களுக்காக வாதாட, போராட ஓர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

அந்த இயக்கம்தான் பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்றும், நீதிக் கட்சி என்றும் வழங்கப்பட்டு வந்த தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்.

சமுதாய நீதிக்காகப் போராடிய அந்த நீதிக் கட்சியின் வழிவந்தவர்கள் தாம் திராவிட இயக்கத்தாராகிய நாம். அந்தக் கட்சி தோன்றுவதற்கு முதன் முதலாக வித்திடப்பட்டது. 1916—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் நாளாகும்.

அந்த நாளில்தான் சென்னை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் உள்ள வழக்கறிஞர் எத்திராசனுர் இல்லத்தில் பார்ப்பனரல்லாதார் தலைவர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது, அப்போது 'வெள்ளுடை வேந்தர்' சர். பி தியாகராயர் டாக்டர் சி நடேசனுர், டாக்டர் டி.. எம்; நாயர் ஆகியோர் முன்நின்று உருவாக்கிய இயக்கம்தான், இன்றைய திராவிட இயக்கத்துக்கு முன்னேடியாக அமைந்த நீதிக்கட்சி.

1916—ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் சர். பி. தியாகராயர் ஓர் அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையே திராவிட இன மக்களின் 'மாக்ன கார்ட்டா' என்று பிற்காலத்திலே போற்றப்பட்டது.

திராவிட மக்கள் அனைவருக்கும் சமநீதி வழங்கப்படவேண்டும் என்றும், மக்கள் தொகை அடிப்படையில்அதிகாரங்கள் - பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வற்புறுத்தப்பட்டிருந்தது.

அந்த அறிக்கைதான் திராவிட இன மக்களை விழிப்படையச் செய்து, உரிமைக்குப் போராடத் தூண்டியது. அந்த அறிக்கையின் பயனுகத்தான் தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றிலேயே ஒரு திருப்பம் ஏற்பட முடிந்தது.

நீதிக்கட்சியின் கொள்கை பரப்பும் ஏடுகளாக ஆங்கிலத்தில் 'ஜஸ்டிஸ' (நாளிதழ்) தமிழில் 'திராவிடன்' (நாளிதழ்) தெலுங்

சர். பி. தியாகராயர்

கில் 'ஆந்திர பிரகாசிகா' (நாளிதழ்) ஆகியவை வெளியிடப்பட்டன.

அப்போது சென்னை மாகாணத்தில் தமிழகத்துடன் ஆந்திர, கேரள, கருநாடகப் பகுதிகளும் இணைந்து இருந்ததால், நான்கு மொழிகளைப் பேசுவோரும் நீதிக்கட்சிக்குப் பேராதரவு நல்கி வந்தனர். நீதிக்கட்சி விரைவில் சென்னை மாகாணத்தினை ஆளும் பொறுப்பையும் ஏற்றது.

நீதிக்கட்சியின் வளர்ச்சி கண்டு பொருதவர்கள் 'நீதிக்கட்சி வெறும் உத்தியோக வேட்டைக் கட்சி' என்றும், வெள்ளையருக்கு வால் பிடிக்கும் கட்சி என்றும் வெள்ளையரின் தூண்டுதலின் பேரில் துவக்கப்பட்டகட்சி என்றும் வசைபாடத் தொடங்கினர்

அன்றைக்கு என்ன — இன்றைக்குக்கூட நம்மைப்பார்த்து மாற்ருர்கள் என்ன சொல்கிருர்கள்? "திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வெள்ளையரின் பூட்சு காலை நக்கிய 'ஜஸ்டிஸ்' கட்சியின் வழிவந்தவர்" என்றுதானே கூறுகிருர்கள்.

அப்படிக்கூறுபவர்களுக்கெல்லாம்அண்ணு அவர்கள் அன்றே பதிலளித்திருக்கிருர்.

1957—ம் ஆண்டு ஆகஸ்டு 11-ம் நாள் மதுரையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பேரறிஞர் அண்ணு அவர்கள் ஆற்றிய உரையின் ஒருபகுதி இதோ:

"காங்கிரஸ் தலைவர்கள்—திராவிட இயக்கத்தவரையும், அதிலும் குறிப்பாக என்னையும் தூற்றுவதற்



காகக் கிளம்புகின்ற நேரத்தில் அவர்கள்சொல்லுகின்ற ஒரேஒரு குற்றச்சாட்டு, இந்த அண்ணுதுரையை நாங்கள் அறியமாட்டோமா? — இவன் நீதிக்கட்சிக்காரன் - என்று சொல்லி வருவதை நீங்களெல்லாம் கேட்டிருக்கிறீர்கள்.

அவர்கள் சொன்ன அத்தனை நேரத்திலும் தெளிவாகத் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன், நான் நீதிக் கட்சியிலே ஈடுபாடு கொண்டிருந்தவன் என்று சொல்லிக்கொள்வதிலே வெட்கப்படவுமில்லை, வேதனையடையவுமில்லை என்று. நான் தமிழகத்து மேடைகளிலே பல தடவை சொல்லியிருக்கிறேன். அதுமட்டுமல்ல; நீதிக்கட்சி இயக்கம் எந்தக் கட்டத்தை அடைய வேண்டுமோ அந்தகட்டத்தை அடைவதற்கு என்னுலான பணியை நான் செய்திருக்கிறேன் என்பது என்னுடைய உள்ளத்திற்கும் தெரியும்; தமிழ்நாட்டு அரசியல் நிலைமைகளை ஆய்ந்தவர்களுக்கும் தெரியும்.

ஆகையினுலே தி. மு. கழகம் நீதிக்கட்சியினுடைய வழி வழி வந்தது என்று காங்கிரஸ் காரர்கள் சொன்னுல் அதைக் குறித்து நான் வருத்தப்படுவதுமில்லை — வெட்கப்படுவதுமில்லை.

பாமர மக்களை ஈடேற்றுவதற்காகவும், பார்ப்பனரல்லாத சமுதாயத்தைக் கடைத் தேற்றுவதற்காகவும், பார்ப்பனரல்லாத சமுதாயம் பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறை

டாக்டர் நடேசனர்

யிலும் முன்னேற்றம் அடையவேண்டும் என்பதற்காகவும் துவக்கப்பட்ட இயக்கம் தவிர, வெறும் பட்டம் பதவிக்காகத் துவக்கப்பட்டதல்ல நீதிக்கட்சி"

பேரறிஞர் அண்ணு அவர்கள் உடல்நலமில்லாதிருந்த நேரத்திலும் 1968 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற நீதிகட்சியின் பொன் விழாவில் கலந்துகொண்டு இந்நாட்டுக்கு நீதிக் கட்சியால் ஏற்பட்ட பலன்களையெல்லாம் எடுத்துச் சொல்லிப் பெருமைபட்டார்கள்.

1920 ஆம் ஆண்டு நவம்பர் 30 நாள் நடைபெற்ற சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் நீதிக்கட்சி மகத்தான வெற்றிபெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றது.

அடுத்து 1923 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நடைபெற்ற தேர்தலிலும் நீதிக்கட்சியே பெருவாரியான இடங்களைக் கைப்பற்றி ஆட்சிப் பொறுப்பேற்றது! 1926—ல் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி பலமிழந்த போதிலும் நீதிககட்சி ஆதரவுடனேயே சுயேச்சைகள் அமைச்சரவை அமைத்தனர். 1929 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் நீதிக்கட்சி பெரும்பலத்துடன் ஆளும் பொறுப்பை ஏற்றது.

இப்படியாக 16 ஆண்டுக் காலம் சென்னை மாநிலத்தை நீதிக் கட்சி ஆண்டது. ஆனுல். அது இரட்டை ஆட்சிக் காலம். அமைச்சரவைக்கு இப்போதுள்ளதுபோல அதிகாரம் கிடையாது. முக்கிய இலாக்காக்களும் அதிகாரங்களும் வெள்ளையரிடமே இருந்தன; தங்களுக்கு இருந்த ஓரளவு அதிகாரங்களைப் பயன்படுத்தியே நீதிக் கட்சி அமைச்சர்கள்

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

புதுயுகம் படைத்த சோவியத் புரட்சி!

புரட்சி என்ற வார்த்தை இன்றைய அரசியலரங்கில்—குறிப்பாகத் தமிழக அரசியலரங்கில் மிகவும் கொச்சையாக்கப்பட்டு விட்டது. போராட்டம் என்ருலே புற முதுகிட்டோடும் அரசியல் கோழைகள் கூட புரட்சித் தலைவர்கள் என விளிக்கப்படும் கேலிக் கூத்தை தமிழ்நாட்டில் மட்டுமே காணமுடியும்.

உலக வரலாற்றின் நீண்ட நெடும்பாதையைத் திரும்பிப் பார்ப்போமானல் சிறிதும் பெரிதுமாக எத்தனையோ புரட்சிகள் வெடித்திருந்ததைக் காணலாம்: மொட்டிலேயே கருகிப் போனது போல, தோன்றிய வேகத்திலேயே மடிந்துபோன புரட்சிகளும் பலப்பல!

ஆனல்—

உலகத்திலேயே வெற்றிக் கொடி நாட்டியதும், ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்கிக் காட்டியதுமான முதல் புரட்சி லெனின் தலைமையில் 1917-ல் நடந்த அக்டோபர் புரட்சிதான்! நவம்பர் புரட்சி என்பதும் இதுதான்...



இரஷ்யாவின் கொடுங்கோன்மையான ஜார் மன்னனைத் தூக்கி எறிய லெனினுக்கு முன்னும் பல புரட்சியாளர்கள் தோன்றினர்கள். ஆனல் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து — ஒரு திட்டவட்டமான முறை இல்லாது செயல்பட்டதால் — அவர்களின் போராட்டங்கள் வெறும் வன்முறைகளாகவும், அவர்கள் 'பயங்கர வாதிகளாகவும் மதிப்பிடப்பட்டதால் அவர்களை ஒடுக்குவது ஜாரின் சர்வாதிகார ஆட்சிக்கு எளிதாகவே இருந்தது!

இவ்வாறு —

திட்டமிடாத, நெடு நோக்கு இல்லாத 'புரட்சியில்ஈடுபட்டலெனினின் அண்ணன் ஜாரின் படைகளால் பிடிபட்டுத் தூக்குக் கயிற்றை முத்தமிட்டார்.

அண்ணனின் சாவு, லெனினின் கருத்துக்களையும்,செயல் திட்டங்களையும் கூர்மைப் படுத்தி, புரட்சியை வெற்றிகரமாக நடத்த ஒரு தெளிவான பார்வையை அளித்தது.

தொழிலாளர்கள், விவசாயிகள் வாழ்வின் கீழ்மட்டத்தில் உழலும் ஏழை மக்கள் ஆகியோரிடையே லெனினும், அவருடைய தோழர்களும் இடைவிடாதும் சோர்ந்து போகாமலும்பிரச்சாரம்செய்தார்கள்...

இந்தப் போராட்டமயமான காலத்தில்—

லெனின் விழித்திருந்த இரவுகள் எத்தனையோ! வெஞ்சிறையில் வாடிய நாட்கள் எத்தனையோ! ஜாரின் இராணுவம்வேட்டை நாயாக அவரைப் பின் தொடர, தலைமறைவாக வாழ்ந்து கொண்டே உழைக்கும் வர்க்கத்தினருக்கு விழிப்புணர்ச்சிஊட்டத்தொடர்ந்து பெரும்பணி ஆற்றினர்— உயிரைத் துச்சமெனக் கருதி!

பழனி சித்தார்த்தன்

லெனின் மக்களிடையே வாழ்ந்தார். மக்களிடமிருந்தே கற்றுக் கொண்டார். கற்றுக்கொண்டதை மக்களுக்கே போதித்தார்; சரித்திர மாற்றம் நிகழ்த்துவது தனி நபர் அல்ல" மக்களே என்பதை உணர்ந்தார்; உணர்ந்ததை மக்களுக்கு உணர்த்தினர்.

அப்படி மக்கள் உணர்ந்து கொண்ட சரியான தருணத்தில் —மக்களைத்திரட்டிப் புரட்சியில் ஈடுபட்டார் — எனவேதான் அக்டோபர் புரட்சி வெற்றி காண முடிந்தது.

" உழைக்கும் வர்க்கம் தன்னுடைய அடிமை விலங்கை உடைத்தெறிந்து, ஒரு புதிய உலகத்தையே பெறப் போகிறது" என்ற கார்ல் மார்க்ஸின் கனவை நனவாக்கியவர் லெனின்'

ரொட்டிகள் கேட்ட மக்களுக்குத் துப்பாக்கிக் குண்டுகளைத்தந்த ஜார் மன்னனுக்கு அதே மக்கள் துப்பாக்கிக் குண்டுகளாலேயே பதில் அளித்தது அந்த நவம்பர் புரட்சியில்தான்!

உலகையே சுருட்டிக் கொள்ளக் கனவு கண்ட முதலாளித்துவமுகாமின் மீது மரண அடி விழுந்தது அந்த நவம்பர் புரட்சியில்தான்!

முதலாளித்துவம் உலகிலிருந்து வேரோடும் வேரடி மண்ணேடும் அழிந்து படப் போவதும், உழைக்கும் வர்க்கமே இனி உலகை ஆளப் போவதும்தான் தவிர்க்க முடியாத — இறுதி உண்மை என்பது நிலைநாட்டப்பட்டதும் அந்த நவம்பர் புரட்சியில் தான்!

1917 — ஆண்டுப்புரட்சிக்கு வித்திட்ட 1905-ஆம்ஆண்டுப் புரட்சியை இந்நாளில் நினைவு கூறவேண்டும்.

" வறுமையில் உழலும் எங்களுக்கு வாழ்வு கொடுங்கள்... நாங்கள் கேட்பது மாட மாளிகைகள் அல்ல ... கூட கோபுரங்கள் அல்ல ... பால் பழம் அருந்தி பஞ்சு மெத்தையில் துயின்று சுகம் காணும் 'சொகுசு' வாழ்வைத் தாருங்கள் என உங்களை நாங்கள் கேட்கவில்லை உண்ண உணவு தாருங்கள்... உடுத்த

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

ஆங்கில ஏட்டின் படப்பிடிப்பு!
முதலாளிகளைப் பாதுகாக்கும் எம். ஜி. ஆர். அரசு!

தமிழகத் தொழிற்சங்க இயக்கத்தின் மீது முழுமையான ஒரு போரையே கட்டவிழ்த்துவிட்டுள்ளது. அ. தி. அ.தி.மு.க. அரசு. சில ஆண்டுகளுக்கு முன்னல் இரயில்வேத் தொழிலாளர்களின் போராட்டத்தை ஒடுக்க காங்கிரசு அரசு ஏவிவிட்ட அடக்குமுறையை நினைவு படுத்துகிறது இது. தனது அரசுக்கு எதிராக நடைபெறும் இந்த இயக்கம் சில சுயநல அரசியல்வாதிகளால் நடத்தப்படுகிறது என்று முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் கூறியுள்ளார். இதுகேலிக்கூத்தானது.

தமிழ் நாடு முழுக்க முழுக்கடை அடைப்பு நடத்த நடவடிக்கைக் குழு விடுத்த அறைகூவலை முறியடிக்க எம். ஜி. ஆரின் அரசு பத்தாயிரத்திற்கும் அதிகமான அரசியல் ஊழியர்களையும், தொழிற்சங்கவாதிகளையும் கைது செய்துள்ளது. அ தி. மு க. அரசின் முதலாளித்துவ ஆதரவுப் போக்கினையே காட்டுகிறது இது. பல இடங்களில் போலீசார் தடியடியும், தஞ்சாவூரில் துப்பாக்கிச் சூடும் நடத்தியிருக்கிருர்கள்.

முழுக்கடை அடைப்பு ஆதரவாளர்களை ஆளுங் கட்சியினர் தாக்கிக் காயப்படுத்திய 'ரௌடித்தனங்கள்' வெட்கக்கேடானவை. தி மு.க. ஆட்சியின்போது மக்கள் மத்தியில் நிலவிய அதிருப்தியைப் பயன்படுத்தித்தான் எம். ஜி. ஆர். ஆட்சிக்கு வந்தார். ஏழை மக்களின் நண்பனுகவும், ஆபத்துக்களில் உதவி செய்பவனுகவும் திரைப்படங்களில் நடித்த எம். ஜி. ஆரின் 'மாயையை' வைத்துத் தேர்தலைப் பயன்படுத்திக் கொண்டது அ. தி. மு. க. ஆனல் காலங் கடந்த போதும் அ.தி.மு.க.வின் முகமூடியை ஊடுருவிப் பார்த்து உண்மையைக் காணத் துவங்கிவிட்டனர் மக்கள். அரசு நிர்வாகத்தின் தரம் மெல்லமெல்லக் குறையத் தொடங்கிவிட்டது.

நிலஉடமையாளர்களும், நிலப்பிரபுக்களும் அ. தி மு. க. அமைச்சரவையை 'பிளாக் மெயில்' (மிரட்டல்) செய்தபோது அமைச்சரவை அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டது. இதனல் விவசாயத் தொழிலாளர்கள், கிராமப்புற ஏழைகள், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் அதிருப்தி தோன்றிவிட்டது.

தொழில்துறையில் முதலாளிகளின் அநியாயமான கதவடைப்புகளை அரசு அனுமதித்தது; உண்மையான தொழிற்சங்கங்களை உடைக்கவும், போலித் தொழிற்சங்கங்களை உருவாக்கவும் அரசு அனுமதித்தது. முதலாளிக்கு ஆதரவாகத் தொழிலாளர்கள் மீது போலீசாரை ஏவிவிட்டு வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது

அரசின் தொழிலாளர் விரோதக் கொள்கைகளினல்தான் தமிழகம் இன்று இவ்வாறு கொதித்தெழுந்துள்ளது. எம்.ஜி.ஆர். அமைச்சரவையின் ஆதரவாளர்கள் கூட எதிர்முகாமில் சேரும்படியான கட்டாயம் நேர்ந்துள்ளது.

வெற்றிகரமாக நடந்து முடிந்த முழுக்கடை அடைப்பு—வேலைநிறுத்தம் தமிழக முதல்வருக்கு விடப்பட்ட ஒரு தெளிவான எச்சரிக்கையாகும்! நடவடிக்கைக் குழுவினரோடு பேச்சு நடத்த மறுப்பதும், பல பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முன்வராமலிருப்பதும் அவரது தன்னகங்காரத்தையே காட்டுகிறது.

தமிழ்நாட்டுத் தொழிலாளர் வர்க்கத்தின் மீது தொடுக்கப்பட்டுள்ள இந்தத் தாக்குதலானது ஜனநாயக உரிமை கொண்ட அனைத்து மக்களின் மீதும் விழுந்துள்ள தாக்குதலாகும். இது நாட்டின் தொழிற்சங்க இயக்கத்திற்கு மட்டுமல்ல, உழைக்கும் மக்களின் அடிப்படை உரிமைகளை நிலைநாட்டும் அனைவருக்கும் எதிராக விடப்பட்டுள்ள சவாலாகும்!

(நன்றி: 'பேட்ரியட்')

தொலைபேசி: கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர் தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11
தனிச்சிறப்பு: சிலேபி, நெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மறறும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமிசன்னதி
72. அழகர்கோவில் சாலை, 72 C. டவுன்ஹால்ரோடு, மதுரை.

மக்கள் இயக்கம்

ஓரணி திரளட்டும்!

காட்டு! கோபால்

கடந்த இரண்டு மாதங்களாகவே தமிழகத்தில் பெரும்பாலான எதிர்க் கட்சிகள்—அனைத்துத் தொழிற்சங்கங்கள் இணைந்து நடத்துகிற கூட்டங்கள்—பிரச்சாரங்கள்—நடவடிக்கைகள் எழுந்துள்ளது எதனாலே?

எதிரும்—புதிருமாக இருந்திட்ட அரசியல் இயக்கங்கள்—தொழிற் சங்கங்கள் ஒன்று சேர்ந்திடத் தக்க நிர்ப்பந்தம் ஏற்பட்டது எதனாலே?

ஒன்றோடு ஒன்று இணைந்திட வாய்ப்பே இருக்காது என்று எண்ணிடத்தக்க நிலையில் இடைவெளி பெரிதாக இருந்திட்ட அமைப்புகள் ஒருமித்துச் செயலாற்றியாக வேண்டிய தவிர்க்க முடியாத நிலை உருவாகியுள்ளது எதனாலே?

வைகளைத் தமிழக மக்கள் நிதானமாகச் சிந்தித்துச் செயல்பட்டாக வேண்டியது அவசர அவசியமானதாகும்.

இந்த நிலை ஏற்பட்டதற்கு நாம் கூறுகிற காரணங்கள், தற்போதைய தமிழக அரசின் அராஜகப் போக்கு நீடித்தால்—ஆளுங்கட்சியினரது வன்முறை வெறிக் கும்பல் மூலமான அடக்குமுறைப் போக்கு நீடித்தால்—ஜனநாயகம் கேள்விக்குறியாக அல்ல—கேலிக்குரியதாகி விடும். சர்வாதிகாரத் தன்மையில் அனைத்துத் தரப்பினரையும் அடக்கி-ஒடுக்குகின்ற நிலைமை நீடிப்பதற்கு வழி விட்டதாக அமையும். தனித் தனியே ஒவ்வொரு கட்சியும்—தொழிற் சங்கமும்—தங்களுக்குள்ளே இருக்கிற விமரிசனங்களைக் கூட கட்டுப்படுத்திக் கொண்டு ஆளுங்கட்சியின்—ஆட்சியின் எதேச்சாதிகாரப் போக்கினைத் தடுத்து நிறுத்திட வேண்டிய தலையாய கடமை அனைவரின் முன் எழுந்து விட்டது, எனவேதான் கட்சிமாச்சரியங்களை விட்டு, ஒருமித்து, இந்த ஆட்சியின், ஜனநாயக விரோதப் போக்கினை — தொழிலாளர் விரோதப் போக்கினை — நியாய விரோதப் போக்கினை — எதிர்த்தாக வேண்டிய அரசியல் ரீதியிலான கட்டாயக் கூட்டு ஏற்பட்டுள்ளது.

இருபது மாத கால ஆட்சியில் விவசாயிகள் போராடிய போது—மாணவர்கள் போராடியபோது ஆசிரியர்கள் போராடியபோது—என். ஜி. ஓக்கள் போராடியபோது—பஸ் தொழிலாளர்கள்—மின்சாரத் துறைத் தொழிலாளர்கள் போன்ற பல்வேறு துறையினைச் சார்ந்த தொழிலாளர்கள் போராடியபோது — ஒவ்வொரு தருணத்திலும் போராட்டங்களுக்கான அடிப்படைக் காரணங்களை அரசு பார்த்திடவில்லை, இவைகளை ஆராயாமலே அரசியல் ரீதியில் மேலேழுந்தவாரியாக அணுகி, எதிர்க் கட்சிகள்தான் இந்தப் போராட்டங்களைத் தூண்டுகின்றன. என்கிறது. தங்களது பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணுவதற்கான மார்க்கமாகத்தான் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளார்களே தவிர, ஆட்சியில் இருக்கிற தங்களுக்குத் தொல்லைகள்கொடுப்பதற்காக அல்ல—என்கிற உண்மை நிலையைச் சிறிது கூடச் சிந்தித்துப் பார்த்திடவில்லை

ஜனநாயக முறை ஆட்சியில்,—மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டுள்ள ஆட்சியில் ஆர்ப்பாட்டங்கள் — கிளர்ச்சிகள்—அறப் போராட்டங்களைத்—தவிர்க்க முடியுமே தவிர முற்றிலும் தடுக்க முடியாதவைகளாகும்! இதனைப் புரிந்து கொண்ட நிலையில் இப்போதைய ஆட்சியினர் செயல்படாததன் விளைவுதான்: ஒவ்வொரு தருணத்திலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிட ஒவ்வொரு தரப்பினரும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்று கூடித் தீர வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இதுவரையிலும் சிந்திக்கத் தவறிய அரசு, இப்போதாவது சிந்தித்துச் செயல்படுகிறதா என்றால் அறவே இல்லை என்பதுதான் தெளிவாகியுள்ளது.

அனைத்து அரசியல் இயக்க தொழிற்சங்கங்கள் இணைப்புக் கூட்டம் 17—10—78 ல் கூடிய போது: தற்போதைய ஆட்சியின் தொழிலாளர் விரோதப் போக்கினைக் கண்டித்தனர். தேங்கியுள்ள தொழிற் தகராறுகளுக்கு விரைவிலும்—சுமுகமாகவும் முடிவு ஏற்படத் தக்க வழிமுறைகளைக்கையாள வேண்டுமென்று வற்புறுத்தினர். இவைகளை வலியுறுத்திட இந்தக் கோரிக்கைகளின் பால் மக்கள் சக்தியை ஒருமுகப் படுத்திட பொது வேலை நிறுத்தம்—கடை அடைப்பு—ஆகிய திட்டங்களை அறிவித்தனர். இந்தத் திட்டங்களை அறிவித்தவுடன் நில்லாமல்—போராட்ட நாளாகிய 23—10—78 ம் நாளைக்கு முந்திய இரவில்கூட; இதன் மீது அரசு பேச்சுவார்த்தை நடத்திட வாய்ப்புள்ளது என்பதனை விநயபூர்வமாகத் தெரிவித்தார்கள்.

இதனை விவேகமுடன் ஆட்சியாளர்கள் அணுகியிருந்தால்; "பொது வேலைநிறுத்தம் — கடை அடைப்பு'' — இந்த நடவடிக்கைகள் கூட நிகழாமல் தவிர்த்திருக்கக் கூடும்.

அதனை விடுத்து காவல் துறைக் கெடுபிடிகள்—தனது சொந்தக் கட்சியின் வன்முறைப் படையினரது வெறித் தாக்குதல்—"பயணிகள் பாது காப்புச் சங்கம்'' என்கிற பெயரில் பத்தாயிரத்திற்கு மேற்பட்டோர் எந்த வகைச் சட்ட விரோதச் செயலில் ஈடுபட்டாலும் அதனைக் கண்டும் காணுமல் காவல்துறையினர் செயலிழந்து இருந்தாக வேண்டிய தந்திரங்களைக் கையாண்டும், சிறைகள் அனைத்தும் நிரம்பி வழிகிற அளவில் பதினையாயிரத்திற்கு மேற்பட்டோரைக் கைது செய்தும்—பொய்வழக்குகள்போட்டும் அடக்கு முறைகளைக்கையாண்டும் அடக்கி ஒடுக்கித் தடுத்திட அரசு முற்பட்டதே தவிர பொது வேலைநிறுத்தம்-கடை அடைப்பு ஆகியவற்றைத் தவிர்த்திட எந்தவித சமரச முயற்சியினையும் மேற்கொள்ளவில்லை.

மக்கள் நலனில் அக்கறை கொண்ட எந்த அரசும் இத்தகைய போராட்டங்களைத் தவிர்த்திடுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதற்குமுயற்சிகளை மேற்கொள்ளும். இந்த முயற்சி வெற்றி அடையாத நிலையில் தவிர்க்க முடியாத நிலைமை எழுமானால் சமாளித்திட முற்படலாம். அதனை விடுத்து, இப்போதைய ஆட்சியினர் எப்படியாவதுபோராட்டங்களை அடக்கி ஒடுக்கிட வேண்டும். போராடுபவர்களை கொடுமைப்படுத்தியாவது — போராடுகிற கட்சிகளை — தொழிற்சங்கங்களைக் கொடுங்கோன்மை முறைகளைக் கையாண்டாவது தனது ஆதிக்கத்திற்கு அடிபணிய வைத்திட வேண்டுமென்கிற முறையினை மட்டுமே கையாண்டனர். இணைந்துள்ள அரசியல் கட்சிகளில் — தொழிற்சங்கங்களில் "மித்ர பேதம்'' செய்திட முடியுமா? என்கிறமுயற்சியில் முதலில் முதல்வர் ஈடுபட்டார். அது வெற்றி பெறாத காரணத்தால் இந்த இணைப்பில் உள்ள தலைவர்களை தரம் தாழ்ந்த நிலையில் விமர்சிக்கத் துவங்கினார்.

—"தலைவராக வேண்டும்'' என்பதற்காக ஒருவரும்—தன் மீதுள்ள வழக்குகளிலிருந்து தப்பவேண்டும் என்பதற்காக ஒருவரும் — சேர்ந்து இந்த ஆட்சிக்குத் தொல்லை கொடுப்பதற்காகப் போராட்டங்களை நடத்துவதாகக் கூறி வசை மாரி பொழிந்தார்.

ஆட்சியினர் தங்களது அதிகாரம்—போலீஸ்படை-சொந்தக் கட்சித் தனி "வெண்படை'' — அனைத்தையும் கொண்டு யுத்தமே தொடுத்தும் கூட அத்தனையும் தாங்கிக் கொண்டு தமிழக மக்கள் 'கடை அடைப்பு — வேலை நிறுத்தம்'' — ஆகியவற்றில் பெரும் பங்கேற்று அனைத்துக் கட்சிகளின் நடவடிக்கைகளில் தங்களை ஒருங்கிணைத்துக் கொண்டனர். அர்த்தாலுக்கு முந்திய தினம் வரை பேச்சுவார்த்தைக்குத் தயாராக இல்லாத முதல்வர்—அர்த்தாலுக்குப் பின்னராவது—'பேச்சுவார்த்தைக்குத் தயார்'' என்கிற அறிவிப்பினை காலந்தாழ்ந்தாவது வெளியிட்டார்.

ஆட்சியை எதிர்ப்பதற்கல்ல, தங்கள்நடவடிக்கைகள்—ஆளுங்கட்சிக்குத் தொல்லை கொடுப்பதற்கல்ல நமதுகுறிக்கோள்—என்கிற நிலையில் எதிர்க்கட்சிகள் இருந்த காரணங்களால்தான்—23—10—78 தேதிக்கு "முன்னும்—பின்னரும்''—தமிழகத்தில் நடந்து வரும் "கொடுங்கோன்மை''—"மிருகத்தனமான தாக்குதல்கள்'' — "பழிவாங்கும் போக்கு'' இவை அனைத்தையும் பொருட்படுத்தாமலும்—நிபந்தனை ஏதும் வற்புறுத்தாமலும்—உடனே "பேச்சுவார்த்தைக்குத் தயார்'' எனத்தெரிவித்தார்கள் — எப்போதுமே பேச்சுவார்த்தை மூலம் முடிவு காணுவதற்கு விரும்பியிருந்த எதிர்க்கட்சியினர் அப்போது பேச்சு வார்த்தை சமரச முடிவு காணவேண்டும்என்கிற விருப்பத்தையே வெளியிட்டனர்.

30—10—78 ம் நாளன்றுமுதல் வரும் ஏனைய சில அமைச்சர்களும்—அனைத்து அரசியல் இயக்க—தொழிற் சங்கங்களின் கூட்டுக் குழுவின் தலைவர்களும் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் சரியான சமரசம் ஏற்படும் என்றுதான் நாடு எதிர் பார்த்தது.

ஆனால் சரியான சாகசம் காட்டப்பட்டதே தவிர "சமரச'' வாடையே துளியும் தென்படவில்லை.

"குறிப்பிட்ட வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்கிற காரணமாகக் கைது செய்யப்பட்டுள்ளோர் தவிர ஏனைய அனைவருமே விடுதலை செய்யப்படுவார்கள்'' என்றுதான் அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது. விடுதலை செய்யப்படாதவர்கள் விசயத்தில் கூட ஜாமீனில் விடப்படுவது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இன்று வரையிலும் ஆயிரக் கணக்கானோர் மீது வழக்குகள் திரும்பப் பெறப் படவில்லை. பல்வேறு மாவட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் இனியும் "நிபந்தனையுடன் கூடிய ஜாமீன்'' அல்லது "ஜாமீன்'' இந்த நிலையில்தான் உள்ளனர். கைது செய்யப்பட்ட பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளிகள் டி, ஐ. சைக்கிள் தொழிற்சாலை தொழிலாளிகள்—டன்லப் தொழிலாளர்கள் சேலம் இரும்பாலைத் தொழிலாளர்கள் - பலநூற்றுக் கணக்கானோர்கள் நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் தொடர்ந்து ஏறி இறங்குகிற "வாய்தா''க்களில் தங்களைப் பிணைத்துக் கொண்டுள்ளனர். தொழிற் சங்கத் தலைவர்கள் மீது அரசியல் முன்னணியினர் நூற்றுக்கணக்கானோர்மீதுபல்வேறு வகைச் சட்டப் பிரிவுகளில் பொய் வழக்குகள் போடப்பட்டுள்ள நிலைமை தான் தொடருகிறது.

உண்மை நிலைமை இது வாக இருப்பினும், போலீஸ் துறை பொறுப்பினை இப்போது நிர்வகித்து வருகிற அமைச்சர் அவர்கள் "எல்லோரும் விடுதலை செய்யப்பட்டு விட்டதாக வெளியிட்டுள்ள செய்தி விந்தையாக உள்ளது.

'ஜாமீனிலும்'' — "நிபந்தனை ஜாமீனிலும்'' உள்ள பல நூற்றுக்கணக்கானோர் விடுதலைப் பட்டியலில் சேர்க்கப்படுவார்களா? அல்லது அச்சுறுத்துகிற நோக்குடன் இந்த நிலை நீடிக்கப்படுமா? என்பது காலத்தால் கண்டறிய வேண்டிய உண்மையாகும்.

இப்போது ஆட்சியினர் இருபது மாதங்களாகக் கடைப்பிடித்து வந்த கடந்த காலப் போக்கின்படி பார்த்தால் இப்போது வழக்கில் உள்ள பல நூற்றுக்கணக்கானோர் — "பத்திரிகைகளில்—அறிக்கைகளில் விடுதலையானவர்களே தவிர உண்மையில் விடுதலை ஆவதற்கு எல்லா அதிகாரங்களையும் தன்னிடத்தே கொண்டுள்ள "புரட்சி ஜனநாயகத்தார்'' வெளிநாட்டுப் பயணம் முடிந்து திரும்பிய பின்னர் அவர் மனமாற்றத்திற்குத் தக்கபடிதான் விடுதலைத் தேதிகள் அமையும்!

காவல்துறைப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ள தற்போதைய மாறுதல் பொறுப்பு காரணமாகவோ—அல்லது கடந்த இருபது மாத காலப் போக்கினை மாற்றிக் கொள்ளாவிட்டால் தமிழகம் பொறுத்துக் கொள்ளாது, "பொங்கி எழும்'' என்கிற நிலையினை உணர்ந்த காரணமாகவோ—உண்மையிலேயே அனைவரும் விடுதலையானால் காரணங்களைப்பற்றிஎண்ணிப் பார்க்காமல் — காரியங்களை எண்ணிப் பார்த்து மகிழ்வோம்.

வெளிநாடு செல்கிறபோது முதல்வர் தெரிவித்துக் கொண்டபடி, தேங்கியுள்ள தொழிற் பிரச்சினைகளுக்கு விரைவாகவும்—சுமுகமாகவும் தீர்வு காணுகிறஉண்மையான நோக்கமுடன் பேச்சுவார்த்தைகள் துவங்கப்படுமா? தொய்வின்றி தொடர்ந்து நடந்து சுமுகமான சூழ்நிலை ஏற்படுமா? என்பதனையும் நாம் கேள்விக் குறியோடு எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

M. K. TRADERS
MK
MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணை முறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்

H. O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண்—பெண் ஏஜெண்டுகள் தேவை

நேரு கண்ட ஜனநாயகம்



கருணாநிதி

பூத்திருக்கும் தோட்டத்தில் புகுந்துவிட்ட
என்றனுக்குக்
காத்திருந்த காட்சியொன்றைக் கவியாக்கித்
தருகின்றேன்;
சிரிக்கின்ற மல்லிகையின் காதுகளில் செண்பகம்தான்
ஏதோ சேதி தனைச் சொல்ல;
சேர்ந்திருவர் சாமந்தியிடம் ஓடி
அவள் செவியில் வாய்வைத்தார்; பின்னர்
மூவருமே முல்லையிடம் முனகிவிட்டு அவளோடு
நால்வருமே நந்தவனம் முழுவதும்
நடைபோடத் தொடங்கிவிட்டார்.
யாரைத்தான் தேடுகின்றார் பூப்பெண்கள்? கட்டுதற்கு
நாரைத்தான் தேடியலைகின்றாரோ - என எண்ணி
நான் வியந்தேன்
தென்றலிலே மணம்பரப்பி தேடுகின்றார் தேடுகின்றார்
தெரியவில்லை யாரை என்று!
"முழங்காலை வலிக்குதடி" என்றாள் முல்லை;
"சிவந்ததடி என்பாதம்" எனச் செண்பகம்
இளித்தாள் பல்லை
சாமந்தி மல்லிகை இருவர்க்கும் பெருந்தொல்லை;
பூங்காவின் மூலையொன்றில் புலம்பல்ஒலி கேட்டவுடன்
பூப்பெண்கள் "அதோ, அதோ!" எனச் சொல்லி
அந்த இடம் பறந்திட்டார்
"பூமானே! புகழ்க்குன்றே! போனாயோ என்தலைவா?
கோமானே! கொள்கைவேந்தே! உன்னைக்
கொள்ளையிட்ட கூற்றெங்கே?
எனையெடுத்து முத்தமீந்து இதயத்தில் ஏற்றிக்
கொண்டாய்—இன்று
எனைவிடுத்து நீமட்டும் நெடுந்தொலைவு போய்விட்டாய்
என்ன நியாயம்?
இதழுக்குத் தேன் தருவாய் - பதிலுக்கு
நான் தருவேன் மறந்தா விட்டாய்?
மார்பகத்தில் அணைத்திருப்பாய்
மகிழ்ச்சி வெள்ளம் கரை புரளும்
மங்கையென்னைப் பிரிவதற்கு உன் மனம்தான்
கல்லோ?"
எனக்கதறும் ஒலி கேட்டு
இனிய நறும் பூப்பெண்கள் அருகே சென்றார்;
மடைதிறந்த வெள்ளம்போல் கண்ணீர் கொட்டி
மயங்கிவிழும் நிலைமையிலே ரோஜா நின்றாள்;
மல்லிகை முல்லை அருகே சென்று
"என்னடி ரோஜா இன்னமும் அழுகை?
நல்லவர் இருந்தார் நானிலம் வாழ
வல்லவர் இருந்தார் வாரி அணைக்க
போனது வருமோ? புலம்பலை நிறுத்து!
பூக்களின் ராணி! புன்னகை காட்டு!"
ஆறுதல் கூறினர்; அழகு ரோஜா
தேறுதல் பெருமல் தேம்பியழுதாள்,
"இரவு உமிழும் எச்சில் என்பேன்
பனித்துளியை—என்
இறைவனது இதழ்முத்தம் அமுதம் என்பேன்
அன்றமுதம் தந்தெனக்கு ஆசைகாட்டி
இன்றென்னை எச்சில் பனித்துளியில்
நனைத்து விட்டார்; என் செய்வேன்?
முடிசூடா மன்னரவர் இனி என்னைச் சூடார்
என நினைக்கும்போதெல்லாம்
முள்ளாகக் குத்துதடி மேனியெல்லாம்!
வாழ்வில் சிரிப்பில்லா எனக்கு இந்தச் சிவப்பெதற்கு?
மனத்தில் மகிழ்வில்லா எனக்கு நறுமணந்தான்
எதற்கு?
இந்தியச் சிம்மாசனத்தில் அவர் இருந்தார் — அவர்
இதயச் சிம்மாசனத்தில் நானிருந்தேன்;
உறங்குகின்றார் விழித்தெழுவார்; படி
இறங்கி வந்து பாவையெனை அழைப்பதற்குள்
அவர் நெஞ்ச
அரங்குதனில் ஆடுதற்குச் சிவப்பாடை
புனைந்து நின்றேன்
அதற்குள் காலக்
குரங்கின் கை மாலை'யாக ஆகிவிட்டார்;
என் வாழ்வை இரவாக ஆக்கிவிட்டு;
போய்விடுங்கள் எனைவிடுத்துத் தனியாக
புனிதனவன் பிறந்தநாளில் கண்புனலை அவன்
காலடிக்குக் காணிக்கை யாக்குதலே என்கடமை"
ரோஜாவின் சொற்கேட்டுச் சோர்ந்துபோனேன்; தன்
ராஜாவின் பிரிவாலே வாடுகின்ற—அவளையெண்ணிப்
பேசாமல் திரும்பிவிட்டேன்; இன்றென்
மனைவி கூந்தல் மணம் வீசாமல் போகட்டுமென்று
மலர் எதுவும் பறிக்காமல் வந்துவிட்டேன்—இன்று
மலர்பறித்தால்; அது மாவீரன் நேருவுக்கு
மாலை தொடுத்திடவே! நம்
மடி பறித்துச் சுதந்திரத்தை அபகரித்த
வெள்ளையரின்
கொடி பறித்து விடுதலைக் கொடி பிடித்த
கொள்கை வீரன்
அடி கொடுத்தால் வாங்கிக்கொண்டு
அடக்குமுறை தாங்கிக் கொள்ள
அண்ணல் வகுத்த வழி
அயராதுழைத்த சிங்கம்!
இளமையின் எழிலை இருட்டுச் சிறையில்
கழித்த தியாகி!
எண்ணெயிட்ட கடுகாய் வெடிக்கும் கோபம்
எனினும்
எண்ணெயிட்டார் விடுதலை வேள்விக் கென்போம்!
பணமலைக்கிடையே பிறந்தார் எனினும்
ஏழையை அணைக்கும்
குணமலையாகத் திகழ்ந்தார் என்போம்!
பணியின் விரைவைப் பம்பரம் என்பர்
பண்டிதர் பணியோ பம்பரம் தோற்கும்
இடிஇடிக்கும் பேச்சில் — இளமைத்
துடிதுடிக்கும் எழுத்தில் — தேன் ஒரு
படி இனிக்கும் பண்பில் — அதிர்
வெடி முழக்கும் செயலில் — விடாப்
பிடியிருக்கும் குணத்தில் — விடுதலைக்
கொடியிருக்கும் கையில் — கொஞ்சம்
முடியிருக்கும் தலையில் —
நீதிக்கு எதிரான வைற்றையெல்லாம்
நேர் நின்று எதிர்த்ததாலே நேருவானார்
...இந்திய
நீள் எல்லைக்கோடு தன்னைப் பெரும்
பகைவர் கடந்த போது — என்ன
நேருமோ என்றேங்கி இருந்த மக்கள்
நெஞ்சின் துயர்துடைத்து, எதுவும்
நேராது நான் இருக்கு மட்டும் எனச்
சொல்லி நேருவானார்.
துணிவிருந்தால் உள்ளத் தூய்மையிருந்தால்
துன்பம் நேருமா? எனக் கேட்டார்
குழந்தையிடம்
இன்பமே நேரும் மாமா என்றது பிஞ்சும் பூவும்—
இதனால் 'நேரு மாமா' வானார்,
மதம் கடவுள் நம்பிக்கை இவைகளிலே
அவர் கொள்கை தனி எனினும் பிறர்
மனம் புண்படாமல் நல்வழியில் ஆட்சி
செய்தார்; தன்
மரணத்தின் பின்னாலே மதச்சடங்கு
வேண்டாமெனத் தக்க
தருணத்தில் உயிலெழுதி உலகிற்கு ஒளி செய்தார்
நடுநிலைத் தன்மை நாலமெனக் கொண்டு
நானிலம் போற்ற நமது பூங்குன்றனார் நவின்ற
"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற
மொழிக்குத்
தோதாய்க் கொள்கை தொகுத்தே சொன்னார்,
காலத்தின் கோலம் காட்டுக்கு ராஜாவாய்க்
கர்த்தபம் ஆகும்
ஏலத்தில் சிலபேர் கோபுர உச்சியில் குந்திக்
கொள்வர், இந்திய
ஞாலத்தின் தலைவராய் ஜவகர் ஆனது
இவ்விதமல்ல! அவர்
சேலத்து மாம்பழம்— சென்னைக் கடற்கரை
கொற்கை முத்து — கொள்ளேகால் பட்டு—
தஞ்சைக் கோயில்- தண்புனல் காவிரி
தறியில் காஞ்சி — தடந்தோள் பாண்டியன்
கருத்தில் மாறுதல் இருந்த போதிலும்—
எதிர்த்தும்—
காலமானார் நேரு என்றதும்
கண்ணீர் உகுத்தார்!
கலங்கி அழுதார்!
காராக்கிரகம் கிடந்த அண்ணா!
கண்ணிய அரசியலைப் போற்றிடும் நாட்டில்
கண்ணிகர் நேருவைப் புகழ்வோம் பாட்டில்!
படை துள்ளி வரும் — பகை
அள்ளி வரும் — எரி
கொள்ளிவரும் — கரும்
புள்ளி வரும் — சீனக்
கள்ளிவரும் — எனச் சிலர்
எள்ளி வரும்போது — விடி
வெள்ளி வரும் எனப் — பகை
கிள்ளி எறிந்தான்... இன்று, திருப்
பள்ளி அயர்ந்தான் — நேரு —
திருப்பள்ளி அயர்ந்தான்!
"வாய் மடித்துக் கிடந்த தலைமகனை நோக்கி—
மணியதரத் தேதேனும் வடுவுண்டாயோ?" எனத்
தாய் அடித்து மோதி அழும் காட்சிகளைப்
பேய் ஆட்டம் போடுகின்ற போர் முகத்தை
நாய்நரிகள் தீனிதின்னும் கொடுமைக் கூத்தைக்
காய், பழம், பூ பிஞ்சு சாய்ந்து விழும்
சமர்க்களத்தை — நம்
கலிங்கத்துப் பரணி சொல்லும், அந்தக்
கலிங்கத்தில் அமைதிபூண்ட அசோக மன்னன்
கண்டெடுத்த அறவழியில் உலகு காக்க நேருபிரான்
கழுகுகளின் இறக்கை வெட்டி வெண்புறாவைப்
பறக்கவிட்டார் விண்ணின் மேலே!
"தலையாகிய அறமே புரி
சரி நீதி உதவுவாய்
சமமே பொருள் ஜனநாயகம்
எனவே முரசறைவாய்" இது
அலை மோதிடும் புதுவையின்
கலைமேவிய பாவலன் — நம்
நிலை மாறிடப் பாடிய காவியம்!
ஜனநாயகம் ஜனநாயகமென ஜவகர் நம்
முழங்கிடச் - சிலர்தம்
தனிநாயகம் சிறந்திடச் செயல்பட்டதைமறந்திடோம்
பணநாயகம் கணநாழியில் தகர்ந்திடக்
குணநாயகர் நேருவும் உடன் முனைந்திடக்
காலந்தான் போதவில்லை
காலமும்மை பொறுக்கவில்லை!



இந்தியாவில் ஒரு தீவு!

ஓராண்டுக்காலம்இந்தியாவே இருண்டு கிடந்து, அதற்குப்பிறகு ஜனநாயக வெளிச்சம் கிடைத்தது.

ஜனதாக் கட்சியில்கூட சில குறைபாடுகள் இருக்கலாம். இந்தத் தேர்தல் நேரத்தில் இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள் அந்தக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுகிறார்கள். ஆனால் ஒன்றை மறந்துவிடக் கூடாது. அந்தக் குறைகளைச் சுட்டிக் காட்டுகிற அளவுக்கு உரிமை இன்றைக்கு ஜனதாக் கட்சி ஆட்சியிலே தான் நமக்குக் கிடைத்திருக்கிறது.

அத்தகைய உரிமைகள்கூட இல்லாத ஓராண்டுக் காலம் இந்தியாவில் இருந்தது.

குறைகளைச் சுட்டிக் காட்டலாம். மொரார்ஜியை குறை கூறலாம், ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களைக் குற்றம் சாட்டலாம். மத்திய அமைச்சர்களின் கருத்துக்களை விமர்சிக்கலாம். அவைகளை பத்திரிகைகளில் வெளியிடலாம். யாரும் பயப்படத் தேவையில்லை.

பெற்று இருக்கிற உரிமைகளை இழந்துவிடாமல் இருக்க, இன்னும் பெறவேண்டிய உரிமைகளுக்காக போராட நாம் நல்லவர்களை, வல்லவர்களை, ஜனநாயகத்தில் நம்பிக்கை உடையவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற குறிக்கோளோடுதான் தி. மு. கழகம் ஜனதாக் கட்சி வேட்பாளரை ஆதரிக்க வைத்தது.

நான்கு ஆண்டுக் காலத்திற்கு முன்னால் கொடுக்கப்பட்ட மனு பரிசீலிக்கப்பட்டு இதில் எதுவும் இல்லை என்று தூக்கி எறியப்பட்ட பிறகு தூசி தட்டி எடுக்கப்பட்டு—கருணாநிதி நம்மை எதிர்க்கிறான்! அவசரக் காலச் சட்டத்தை எதிர்க்கிறான்! தலைவர்களை விடுதலை செய்யவேண்டும் என்கிறான்! அப்படியானால் இதோ சர்க்காரியா கமிஷன் என்றார்கள்.

கவலையில்லை. சர்க்காரியா கமிஷனல்ல; தூக்கு மேடைக்கே எங்களை அனுப்பினாலும் கருணாநிதியின் வாய் ஜனநாயகம் ஜனநாயகம் என்று சொல்லுமே தவிர சர்வாதிகாரத்திற்கு அடிபணியாது என்று சொன்ன காரணத்தால்தான் நாங்கள் இவ்வளவு சங்கடங்களையும் நாட்டில் ஜனநாயகம் பூத்துக் குலுங்குகின்ற நேரத்திலும் நாங்கள் தமிழ்நாட்டில் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

நான் இவைகளைச் சொல்லக் காரணம் இந்தியாவிலே அன்றும் தமிழ்நாடு ஒரு தீவாக இருந்தது. அப்பொழுது இந்தியா முழுவதும் சர்வாதிகாரமாகவும் தமிழ்நாடு ஜனநாயக தீவாகவும் இருந்தது.

இன்று இந்தியா முழுவதும்ஜனநாயகமும் அதிலே தமிழ்நாடு சர்வாதிகாரத் தீவாகவும் இருக்கிறது.

எனவே —

தமிழ்நாடு அன்றைக்கும் தீவுதான் இன்றைக்கும் தீவுதான். அன்றைக்கு ஜனநாயகத் தீவு. இன்றைக்கு சர்வாதிகாரத் தீவு.

-கலைஞர்

சிக்கமகளூர் பொதுக்கூட்டத்தில்

இந்திராவின் வெற்றியில்

நாயகத்தைக் காக்க—எந்த உணர்வுகளின் அடிப்படையில் நெருக்கடி நிலையை எதிர்த்துத் தீர்மானம்நிறைவேற்றி ஆட்சியையே இழக்கத் தயாரானதோ அதே போன்று; ஜனதா கட்சியினரால் ஏமாற்றத்திற்கு ஆளானாலும் ஜனநாய

இந்தத் தேர்தல் இந்திய தேசிய காங்கிரசை இரண்டாக உடைத்திருக்கிறது. அது தனிப்பட்டவர்களால்விளைந்ததல்ல. ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சி என்ற நிலைதான் உண்டு. எதிர்க்கட்சிக்கு எதிர்க்கட்சி—ஆளுங்கட்சியுடன் தொடர்

குறிப்பாகச் சொல்வதானால் கேரளத்து ஸ்டீபனைப்போன்று வேகமாக இந்தித் திணிப்பை எதிர்ப்பாரா? அல்லது குறைந்த அளவு இந்தியைத் திணிக்கக் கூடாது என்று மத்திய அரசுக்கு ஆலோசனை கூறுவாரா? அவரைத் தேர்ந்

ஆட்சித் தலைவராக இருந்தவரை எதிர்க்கட்சித் தலைவராக இந்திரா காந்திமூலம் சந்திக்கிறது.

நாடாளுமன்ற ஜனநாயகம் என்ற ஊர்தியில் எதிர்க்கட்சி ஒரு பிரேக் ஆகும்.

அப்படிப்பட்ட எதிர்க்

எழுந்துள்ள கேள்விக்குறிகள்...

இந்திரா வெற்றி பெற்று விட்டார்.

இந்திரா காங்கிரசார் ஆர்வத்தோடும் ஜனதா கட்சியினர் வெறுப்போடும் எதிர்ப்போடும் எதிர் பார்த்த தேர்தல் முடிவு வந்துவிட்டது.

மத்திய அரசில் இந்த வெற்றி பெரிய மாறுதல் எதையும் ஏற்படுத்தப் போவதில்லை என்றாலும் கூட ஆளும் ஜனதா கட்சியினர் வேண்டா வெறுப்புடன் சவாலைச்சந்தித்தனர். தேர்தல் முடியும் வரை தொய்வின்றி துவண்டு போகாமல் செயல்பட்ட ஜார்ஜ் பெர்னண்டஸ் இந்திரா பெறக் கூடிய அதிக ஓட்டின் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைத்திருக்கின்றார்.

"நான் இதுவரை எந்தத் தேர்தலிலும் தோற்றதில்லை" என்றுகூறி களத்தில் இறங்கிய விரேந்திர பட்டீல் தனது தோல்வியை— அதற்கான காரணம் இதுவென்று சால்சாப்பு கூறாமல் ஒத்துக்கொண்டிருக்கின்றார்.

"நான்தான இந்திரா காங்கிரசின் இரண்டாவது பெரிய தலைவன்" என்று தேவராஜ் அர்ஸ் நிகழ்ச்சியை ஒத்திகை பார்த்து அரங்கேற்றி நிரூபித்திருக்கிறார். அவரது அரசியல் நடத்தும் முறையிலிருந்து அவர் ஜனதாவுக்கு ஒரு சவாலா அல்லது இந்திராவுக்கு ஒரு சவாலா என்று தீர்மானிக்க முயன்று அதில் பெரும்பான்மையான அரசியல் நோக்கர்கள்இரண்டாவதாகத் தரப்பட்ட கருத்தையே பின்பற்றி நிற்கின்றார்கள்.

பாம்புக்கு வாலும் மீனுக்கு தலையும் என்று காட்டிச் செல்கின்ற விலாங்கு ராஜ தந்திரத்தைக் கையாளும் எம். ஜி. ஆர் தேர்தல் முடிந்த பின்னும் பாராளுமன்றத்தில் ஜனதா கட்சியினரையே ஆதரித்து நிற்கப் போகிறார். இந்திராவை ஆதரித்ததால் மொரார்ஜிக்கு ஏற்பட்ட கோபத்தை-(அப்படி கோபம் ஏதாவது ஏற்பட்டிருக்குமானால்) வருகின்ற நகரசபைத் தேர்தல்களில் அல்லது சென்னை மாநகராட்சித் தேர்தலில் ஜனதா கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து தணிப்பதற்கு முயல்வார்.

"தன் முயற்சியில் சற்றும் தளராத விக்கிரமன் மீண்டும்..." என்று அம்புலி மாமாவின் விக்ரமாதித்தன் கதையில் வருவது போன்று ஜனகத்திற்கு ஏற்பட்ட நெருக்கடிகளை நினைவுக்குக்கொண்டு வர-அந்தக் காலங்களில் தி. மு. கழகத்தின் நிலை என்ன என்பதையும் நினைவுக்கு கொண்டு வர இந்திராவை எதிர்த்தது. தி.மு.க.

தனிப்பட்ட இந்திராவை எதிர்ப்பது தி. மு. கழகத்தின் நோக்கமல்ல, சர்வாதிகார உணர்வுகளை எதிர்க்க தி மு.க, பின்வாங்கியதில்லை.

இந்திரா காந்தி பாராளுமன்றத்திற்குச் செல்லக்கூடாது எனத் தீர்ப்பளித்தது உத்தரப்பிரதேசம். எதிர்க்கட்சித் தலைவராக இந்திரா காந்தி பாராளுமன்றம்செல்ல அனுமதி வழங்கி இருக்கிறது. கர்நாடகம். இடைப்பட்ட காலங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் மூலம் ஆளும் ஜனதா கட்சிக்கு ஒரு மூக்கணாங்கயிறு போட மக்கள்

ஏ. எஸ் சக்கரவர்த்தி எம். ஏ.

விரும்பியிருக்கிறார்கள். ஜனதா கட்சியை மக்கள் நிராகரித்துவிட்டதாக இந்திராகாங்கிரஸ் சுயதிருப்தி அடையலாம். ஆனால அவர்களுக்கும் வாக்குகள் கணிசமாகக் கிடைத்திருக்கின்றது. அதே நேரத்தில் தேர்தலையே ஒராண்டுதள்ளிப் போட்டவர்கள் ஒரு இடைத் தேர்தல் வெற்றியின் மூலம் பாராளுமன்றத்தைக்கலைக்கும் படிக்கேட்க தார்மீக உரிமையற்றவர்கள்

இந்திராகாங்கிரஸ்தோற்ற எந்தத் தொகுதியிலிருந்தும் மீண்டும் இந்திரா வெல்லவில்லை. டெல்லியிலிருந்துமிகத் தூரத்தில் உள்ள தொகுதி ஒன்றில்தான் வெற்றி பெற்றிருக்கின்றார். அதுவும் ஏற்கனவே காங்கிரஸ் வென்ற தொகுதி.

இந்திரா மீது பாராளுமன்றத்தில் கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகளுக்கு நேரடியாக அவரே பதில் கூறட்டும் என எதிர்பார்த்துஅவரைநாடாளுமன்றத்துக்கு அனுப்பி இருக்கின்றனர் மக்கள்.

தண்டனைக்குரிய கோர்ட் விசாரணையில்பேசாத இந்திரா காந்திக்கு, தண்டனையில்லாத தன்னிலை விளக்கமளிக்கும் வாய்ப்பாக சிக்மகளூர் வெற்றி தரப்பட்டிருக்கிறது. பெண்மைக்கு இரங்கும் நம் நாடு இந்திரா காந்திக்கு அளித்திருக்கும் சலுகை இதுவெனக் கூறலாம்.

பில்லை என்ற மூன்றாவது நிலை நாட்டில் கிடையாது. அகில இந்தியாவில் சுவரண்சிங் காங்கிரசின் நிலை எதுவோ அதுவே இன்றைய தமிழ்நாடு இந்திரா காங்கிரசின் நிலையாகும். கசப்பானதானாலும் உண்மை அதுவே. மூன்றாவது வலிவான சக்தியாக இருக்கலாம். ஆனால் அந்நிலையைத்தொடர்ந்து நிலைநிறுத்த இயலாது. நாடாளுமன்ற ஆட்சிமுறையின் தொட்டிலான பிரிட்டனில் உள்ள கட்சிகளேகூட தவித்திருக்கின்றன.

கட்சிகள் பல இருந்தாலும் ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்ற இரு நிலையைத் தவிர மூன்றாவது நிலை கிடையாது. இதனை உணராது அல்லது உணர்ந்தும் உணராமல் இருப்போர் அரசியலில் உதவாமல் போவார்கள். இன்றைய உதாரணம் சுவரண்சிங் காங்கிரஸ்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இந்த விமர்சனத்திலிருந்து தப்ப இயலவில்லை. அகில இந்திய அரசியலில் அவர்கள் நிலை அது. ஆயினும் தமிழ்நாட்டில் அவர்கள் இன்று ஒரு எதிர்க்கட்சியாக செயல்பட ஆரம்பித்திருக்கின்றனர். மாநில அளவில் முடிவெடுப்பதில்—அவர்களுச்கு வலிவுள்ள மாநிலங்களில் ஆளுங்கட்சி அல்லது எதிர்க்கட்சி என்ற அளவில் அவர்கள் செயல்படுவதாகத் தெரிகிறது.

அகில இந்தியாவில் இந்திரா காங்கிரஸ் எதிர்க்கட்சி. ஜனதா ஆளுங் கட்சி, தமிழகத்தைப் பொறுத்தவரை இந்திரா காங்கிரஸ் என்ன கட்சி?...கேள்விக்குறி இன்னும் பதிலாகவில்லை. ஜனதாவும் அப்படியே!

தி. மு. கழகத்தைப் பொறுத்தவரை இரண்டு கட்சிகளும் அரசியல் தீண்டாமையை வலியுறுத்துவோர் ஆதிக்கத்தில் இருப்பதை உணர முடிகின்றது. தீண்டாமை பழமையான கருத்து—மூடப்பழக்கம். அரசியல் தீண்டாமை அதைவிடப் பழமையானது. அதனைப் பின்பற்றுவோர் அரசியலில் தீண்டத்தகாதவர்களாக ஆவாக்கள்.

சிக்மகளூர் தேர்தலின் பாதிப்புகளும் பிரதிபலிப்புகளும் அரசியல் பாடம் பெறுபெறுவதற்கு எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு அதன்மூலம் எழுந்திருக்கிற கேள்விக் குறிகளும் எதிர்பார்ப்புகளும் முக்கியமானது.

இந்திரா காந்தி தென் மாநிலமக்களின்உணர்வுகளைப் பிரதிபலிப்பாரா என்பது கேள்விக்குறி. இன்னும் தெடுத்த கர்நாடக மாநிலத்தின் கருத்தைப் பிரதிபலிப்பாரா அல்லது அவரை வளர்த்த இந்திக்கு ஆதரவாயிருப்பாரா?

இது மக்கள் முன்னுள்ள கேள்விக்குறி.

இந்தியைத் திணிக்காதே என அறிவுறுத்துவார் என்பது தென் மாநில மக்களின் எதிர்பார்ப்பு. இந்தக் கேள்விக் குறிக்கும் எதிர்பார்ப்புக்கும் காலம்தான் பதில்கூற வேண்டும்.

தமிழகத்தில் ஆட்சித் தலைவராக இருந்தவரை எதிர்க்கட்சித் தலைவராக முதன் முறை சந்தித்தோம்.

இக்தியா முதன் முதலாக கட்சிகளுக்கு உரிய மரியாதையை அளித்து அழைத்துப் பேச மறுத்தவர் இந்திரா. அதன்மூலம் அவர் ஜனநாயகவாதி என்பதைவிடத்துணிவானவர் என்ற பெயருடன் சர்வாதிகாரி என்ற பட்டமும் இணைந்துகொண்டது.

எதிர்க்கட்சிகளுக்கு உரிய மரியாதையை அளித்து அழைத்துப் பேசிய டாக்டர் கலைஞர் திறமையானவர் என்ற பெயருடன்ஜனநாயகக் காவலர் என்றபட்டத்தையும் பெற்றார்.

தமிழகம் இந்த இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்களை ஒப்பிட்டுப் பார்க்க காத்திருக்கிறது,

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களுடன் பேசிய போது அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட உறுதிமொழிகள்—நம்பகமான வார்த்தைகள்—தற்போதைய ஒரு வார கால நடைமுறையோடு இணைத்துப் பார்த்தால் "திருப்திகரமாக இல்லை"—"சந்தேகத்தைத் தூண்டியுள்ளது."

"பொது வேலை நிறுத்தம் கடையடைப்பு" இந்த நடவடிக்கைகள் நிகழுவதற்கு முன்பே — முன் நடவடிக்கையாகக்கைது செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கானோர் —தடுப்புக்காவல் சட்டப்படி மட்டுமே வைத்திருந்தால் அர்த்தால் நடந்த ஓரிரு தினங்களுக்குப் பின்னர் அனைவருமே விடுதலையாக்கப்படுவார்கள். இதுதான் எந்த அரசாங்கமாக இருந்தாலும் இவ்வளவு காலமாக கையாண்டுவந்த வழிமுறைகளாகும். ஆனால் இப்போது மட்டும்; முன்பு எப்போதுமில்லாத முன் மாதிரியாக; முன்கூட்டியே தடுப்புக்காரணமாக பிடிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானோர் மீது கூட "கிரிமினல் 7 ஏ" பிரிவு சட்ட நடவடிக்கையும் போடப்பட்டு, கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அர்த்தாலுக்குமுன் தடுப்பு நடவடிக்கையாக கைதாகிய பல்லாயிரக்கணக்கானோர் —பதினைந்து நாட்கள் கடந்த பின்னரும்கூட — ஜாமீனில் இருந்து வருகிற நிலைமையே நீடிக்கிறது. அர்த்தாலின் போது கடை அடைத்ததற்காகத்தாக்கப்பட்டனர் அர்த்தாலுக்கு மறுதினம் கடை திறந்து வைத்திருந்தபோது 'முந்தைய நாள் ஏன்மூடினாய்?' என்று கேட்டு தாக்கபட்டுகின்றனர். இந்தக் கொடுமைகள் தொடர்ந்து நடைபெறுகின்றனவே தவிர — எந்த மாற்றமும் இல்லை

அரசாங்கத்தின் அராஜகப் போக்கு — தொழிலாளர் விரோதப் போக்கு — நியாய விரோதப்போக்கு — எந்த வகையிலும் மாறுததால் தான் 11. 12 தேதிகளில், அரசாங்கத்திற்கான "கோரிக்கை நாள்" கூட்டங்களாக நடத்திட திராவிட முன்னேற்றக் கழகம் தனித்து ஏற்பாடு செய்திருந்த நிலமையினை மாற்றி—அனைத்து அரசியல் கட்சிகள் — தொழிற்சங்கங்கள் — இணைந்து நடத்துகிற கூட்டங்களாக மாற்றப்பட்டுள்ளன. வழக்கு அனைத்தும் திரும்பப் பெற்றிட ஆளுங்கட்சியின்வன்முறைப் படையைக் கலைத்திட காவல்துறையினரும் — அரசு நிர்வாகமும் சுதந்திரமாகச் செயல்பட்டு சட்டம்—ஒழுங்கைப் பாதுகாத்திட—எதிர்க்கட்சியினர் மீது ஏவிவிடப்பட்ட வன்முறைக்குக்காரணமானவர்கள் மீது நடவடிக்கைகளை எடுத்திட—ஜனநாயக உரிமைகளைக் காத்திட — தொழிற்சங்க உரிமைகளைக் காத்திட அனைத்து அரசியல் இயக்கங்கள் — தொழிற்சங்கங்கள் சார்பில் - விடப்பட்ட அறைகூவலின்படி "மக்கள் இயக்கம்" ஒரணிதிரளட்டும்—

‘இந்து’-வின் குதர்க்க வாதம்!

இந்திய அரசின் வேலை வாய்ப்புக்களுக்காக நடத்தப்படும் தேர்வுகளை இனிமேல் அரசியல் சட்டத்தின் எட்டாவது அத்தியாயத்தில் உள்ள ஏதாவது ஒரு மொழியில் எழுதலாம் என்று கோத்தாரி குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி 1979 முதல் நடைபெறும் மத்திய பொதுத்துறை வேலை வாய்ப்புக் கழகத்தின் தேர்வுகளை இனிமேல் அந்தந்த மாநில மொழிகளிலும் எழுதலாம், தேர்வுக்கான கேள்வித்தாள்கள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் இருக்கும். விடைத்தாள்கள் மாநில மொழிகளில் இருக்கலாம்.

—இது செய்தி

தனது 4 11—78 தலையங்கத்தில் ‘இந்து’ பத்திரிகை இந்த முடிவு தவறானது என்றும், கவலை தரத்தக்க முடிவு என்றும் மத்திய அரசைக் கண்டித்துள்ளது.

பல்வேறு மாநில மொழிகளில் தேர்வுகளை எழுத அனுமதித்தால் விடைத்தாள்களை சரிபார்க்க சம்பந்தப்பட்ட மாநில மொழி தெரிந்தவர்களிடம் அவை அனுப்பப்பட்டுமதிப்பெண்கள்போடப்படும்போது மதிப்பிட்டு செய்யும் அவர் மொழி வெறி காரணமாக மதிப்பெண்களை வரம்பு மீறி அள்ளி வழங்கி விடுவார். இறுதியில் ‘மண்ணின் மைந்தர்கள்’ என்ற இணக்கத்தில் உணர்வுகள் மேலிட்டு நாட்டின் ஒருமைப்பாட்டையே அது கெடுத்து விடும் என்று ‘இந்து’ கண்ணீர் வடித்துள்ளது.

இப்போதுதான் மாநில மொழிகளிலும் தேர்வுகளை எழுதலாம் என்ற முடிவு வெளியாகியுள்ளது. ஆனால் இதுவரை மத்திய பொது வேலை வாய்ப்புக்கழகம் நடத்திய தேர்வுகள் அனைத்தும் ஆங்கிலத்திலோ இந்தியிலோ இருக்கவேண்டும் என்ற நிலை இருந்தது.

ஒரு தேர்வுக்கான விடையை எழுதும்போது ஒருவன் தன்னுடைய தாய்மொழியில் எழுதும்போது நிச்சயம் மதிப்பெண்களைப் பெற முடியும். புதிதாகத் தான் கற்றுக்கொண்ட வேற்றுமொழியில் தேர்வினை எழுதி பெறுகின்ற மதிப்பெண்களைவிடத் தாய்மொழியில் அதே தேர்வினை எழுதும்போது அதிக மதிப்பெண்களை பெறுகின்றான். இந்த இயல்பை யாரும்மறுக்க முடியாது!

இந்த அடிப்படையில் பார்த்தால் நம்மைப் பொறுத்தவரை ஆங்கிலம் எப்படி அந்நிய மொழியோ அதைப்போலவே இந்தியும் அந்நிய மொழிதான். இதுவரை நடந்த மத்திய வேலை வாய்ப்புக் கழகத்தின் தேர்வுகளை இந்த இரண்டு மொழிகளில்தான் எழுதி வந்தோம். குறிப்பாக இந்த இரண்டு மொழிகளில் நமக்கு அதிகம் தெரிந்த ஆங்கிலத்தில்தான் அந்தத் தேர்வுகளை எழுதி வந்தோம்.

பொதுத்தேர்வுகளை நமக்கு வேற்று மொழிகளான இந்தியிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதிப்பெற்ற மதிப்பெண்களை விட இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர் நிச்சயம் இந்தியில் தேர்வு எழுதி அதிகம் மதிப்பெண்களை பெற்றிருப்பார்.

டி. ஆர். பாலு

அப்படிப்பெற்ற மதிப்பெண்கள் அவரின் மேம்பாட்டிற்கு வழி வகுத்திருக்கும். நம்மவர்களைப் பின்னுக்குத் தள்ளியிருக்கும்.

இந்த நிலையைத்தான் அவ்வப்போது கழகம் சுட்டிக் காட்டி வந்துள்ளது. ஆங்கிலம் மட்டும்மே தேர்வு மொழியாக இருந்தால் இந்த நிலை வந்திருக்காது. ஏனெனில் இந்தியாவில் உள்ள எல்லா மாநில மக்களும் அறிவியலின் துணை கொள்ள ஆங்கிலம் படிக்க வேண்டியுள்ளது. ஆகவே ஆங்கிலம் கட்டாயமாகத் தேவைப்படுவது மட்டுமின்றி எல்லா மொழி பேசுவோர்களிடையேயும்ஒருமைப்பாட்டை ஆங்கிலத்தினால் மட்டுமே ஏற்படுத்த முடியும்

அந்தந்த மாநில மொழிகளில் தேர்வுகளை எழுதி, அது அந்த மாநிலத்தைச் சார்ந்த ஒருவரிடம் மதிப்பீட்டிற்குச் செல்லும்போது அவர் மொழி வெறியினால், மாநில உணர்வால் ‘மண்ணின்மைந்தர்கள்’ என்ற அடிப்படையில் மதிப்பெண்களை அள்ளி வழங்குகின்ற தவற்றைச் செய்து தேசீய ஒற்றுமைக்கு உலை வைக்க ஏதுவாகும் என்று ‘இந்து’ எழுதியுள்ளது.

இந்தக் கூற்றை ஏற்றுக் கொண்டால் இதுவரை இந்தியில் தேர்வு நடைபெற்ற போது இந்தித் தேர்வுத் தாட்களை மதிப்பீடு செய்தவர்கள் இந்தி வெறியர்களாக இருந்திருக்க மாட்டார்களா? அந்த வெறியில் மதிப்பெண்களைத் தவறான அடிப்படையில் அதிகம் வழங்கி, இந்தி பேசுகின்ற மாநில மக்களின் மேம்பாட்டிற்குத்தவறானமுறையில் வழி வகுத்திருக்கமாட்டார்களா? அப்படி வகுக்கப்பட்ட வழிகளின் அடிப்படையில் இந்தி பேசாத மாநில மக்களின் வேலை வாய்ப்புக்கள் கெடுக்கப்பட்டிருக்காதா? இதனால் அந்த மக்கள் இரண்டாந்தர நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க மாட்டார்களா? இதை ஏன் இதுவரை இந்துப் பத்திரிகை எழுதிக் காட்டவில்லை? இந்தி மீதும், இந்திமொழிபேசுகின்ற மாநில மக்கள் மீதும் இந்துப் பத்திரிகை கொண்டுள்ள மரியாதை இந்தி பேசாத மாநில மக்கள் மீது கொள்ளாதது ஏனோ?

இந்தியிலும் ஆங்கிலத்திலும் தேர்வுகள் நடைபெற்ற போது தேர்வு மதிப்பீட்டாளர்களை எப்படி நாம்நம்பினோமோ அதேஅடிப்படையில் மாநில மொழிகளில் தேர்வு நடைபெற்று, தேர்வுத் தாள்களை மதிப்பீடு செய்யும் மதிப்பீட்டார்களையும் நம்புவதற்கு ‘இந்து’ கற்றுக் கொள்ள வேண்டும்.

★★★
★★
★

★

இந்தியச் சிறைச்சாலைகளின் இருண்ட நிலை!

ஒரு சிறைச்சாலை மதிற்சுவர்களின் உள்ளேகைதிகளுக்கான விதிமுறைகள், சிறைச்சாலை நியதிகள், அரசியல் அமைப்புச்சட்டம் - எதுவுமே எடுபடாது! உறுதி செய்யப்பட்ட விதிகளையும், வழக்கங்களையும் புறக்கணித்துவிட்டு, கட்டுப்பாடற்ற அங்கீகாரம் — பலம் ஆகியவைகளின் துணையோடு ‘சூப்பிரண்டண்ட்’ சிறைச்சாலையின் ‘ஏக கடவுளாகத்’ திகழ்கிறார். ஒருகைதி தன் ‘தலைவிதி’யிலிருந்து இங்கு தப்பிக்கவேண்டுமானால் பணத்தையோ, ஏதாவது பொருளையோ அவன் இலஞ்சமாகத் தரவேண்டும்.

நீங்கள் தனி அறையில் அடைக்கப்படாதிருக்க விரும்பினால், நீங்கள் விலங்கிடப்பட்டு இரும்புச் சங்கிலிகளால் பிணிக்கப்படாதிருக்க விரும்பினால். சிறைச்சாலை விதிகளால் அனுமதிக்கப்பட்ட உணவையும். சலுகைகளையும் நீங்கள் பெற விரும்பினால் — அதற்காக வேண்டி ‘விலை’யாக நீங்கள் ஏதாவது செலுத்தவேண்டும்.

அவ்வாறே நீங்கள் அடிவாங்காமல் இருக்கவேண்டும் என்று விரும்பினால், அதற்கும் ‘விலை’யாக ஏதாவது செலுத்தவேண்டும். உங்கள் குடும்பத்தார் வந்து உங்களைச் சந்திக்கும் உரிமை இருந்தபோதும் அவர்களைக் காணவும், உங்களுக்கு வரும் கடிதங்களைப் பெறும் உரிமை இருந்தபோதும் — அவைகளைப் பெறுவதற்காகவும் நீங்கள் ‘விலை’ கொடுத்தே ஆகவேண்டும்.

விதிகளின்படியும் (Acts) சட்டப்படியும் (Law) நடத்தப்பட்டாலே போதும் என்று நீங்கள் விரும்பினால் கூட. அதற்கும் ஏதாவது கொடுக்க வேண்டும்...கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும்...

கைதிகள் நலன் - மறுவாழ்வுத் திட்டங்களைச் செயலாக்கத் தகுதி அற்றவர்கள் சிறையில் வேலை பார்ப்பவர்கள். ஊழல் மட்டுமே அதற்குக் காரணம் அல்ல. மேலதிகாரிகள் அவர்களுக்கு வழங்கி இருக்கும் வர்ணிக்க இயலாத முழு அதிகாரம் அவர்கள் ஒவ்வொருவரையும் ‘கீழ்த்தரமான’ சர்வாதிகாரியாக மாற்றியுள்ளது. எல்லாச் சிறுமதியினரான மனிதர்களைப் போல் அவர்கள் கைதிகளிடம் பலத்தைச் செலுத்துகிறார்கள் பிறர் படும் துன்பத்தை உணராமலும். ஈவிரக்கம் இல்லாமலும் கைதிகளை அடித்துத் துன்புறுத்துவதில் மிருகங்களாகவே மாறிவிடுகிறார்கள்! அடிப்பது அங்கு அன்றாட கடமையாகும்!

...மிருகத்தனமான இந்த அடி உதைகளினால் இறுதியில் கைதிகளுக்கு மரணக் காயங்கள் ஏற்பட்டு விடுகின்றன.

[சி. ஜி. கே. ரெட்டி எழுதிய PRISONERS UNFETTERED என்ற கட்டுரையிலிருந்து — ‘சண்டே’ 29 10.78]

★

புதுயுகம் படைத்த சோவியத் புரட்சி...

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

உடை தாருங்கள் ... இருக்க இடம் தாருங்கள்...’’

1905 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 22-ஆம் நாளன்று அரசனின் அரண்மனை முன் ஆயிரக்கணக்கான ஏழைகள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஒன்றுதிரண்டு இவ்வாறு முறையிட்டனர்.

அந்த முறையீட்டைக் கேட்க அரண்மனை வாயிலைத் திறந்துகொண்டு அரசன் வெளி வரவில்லை!

மாறாக —

அவன் ஏவிவிட்ட அவனுடைய குதிரைப் பட்டாளம், அந்தப் பட்டினிப் பட்டாளத்தின் மீது பாய்ந்தது! கந்தலுடுத்தி, கண்களில் கலக்கம் தேக்கி, பசியால் வயிறு ஒட்டி நடமாடும் எலும்புக் கூடுகளாகத் திரண்டிருந்த அந்த நிராயுதபாணிகளான, பரிதாபத்திற்குரிய மக்கள் மீது ஜாரின் இராணுவம் துப்பாக்கிக்குண்டுகளை மழையெனப் பொழிந்தது!

1917-ஆம் ஆண்டுப்புரட்சி தழைக்கக் காரணமாக அமைந்தன, 1905-ஆம் ஆண்டுப் புரட்சியின்போது உழைக்கும் வர்க்கம் சிந்திய இரத்தமும், வடித்த கண்ணீரும்!

ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்த புரட்சியை வெற்றிகரமாக நடத்திக் காட்டியதோடுலெனினுடையபணி ஓய்ந்துவிடவில்லை!

அதன் பின்னும் —

புதிய சோவியத்தைஏராளமான பிரச்சினைகள் எதிர் நோக்கி நின்றன...

போராட்ட நாட்களில் வாக்களித்ததுபோல் உழுபவனுக்கே நிலத்தை உடைமையாக்க வேண்டும்; முதலாளிகளின் கரத்திலிருந்து தொழிற்சாலைகளைப் ‘பிடுங்கி’ அவைகளைத் தொழிலாளர்களுக்கு உரிமை ஆக்கவேண்டும்; கூட்டுப் பண்ணைகளை நிறுவவேண்டும்; அடிமைத்தனத்திலிருந்து பெண்களை மீட்டு, அவர்களை ‘ஆணுக்கு நிகர்’ ஆக்கவேண்டும் - சரி உரிமைவழங்கவேண்டும்! அரசாங்கத்தின் மீது மத நிறுவனங்களுக்கு உள்ள ஆதிக்கத்தைத் தகர்க்கவேண்டும்; முதலாளித்துவ ஏகாதிபத்தியம் தூண்டிவிடும் உள்நாட்டு எதிர்ப் புரட்சியாளர்களை ஒடுக்கவேண்டும்: சீரழிந்த பொருளாதாரத்திற்குப் புத்துயிர் அளிக்கவேண்டும்; முதலாளித்துவம் தூவிவிட்ட நச்சு விதைகளின் மிச்சசொச்சங்களைக் கண்டுபிடித்து அகற்றவேண்டும்; சோவியத்தைப் புதிய பூமியாக்கியசோசலிசம் பிறநாடுகளுக்குப் பரவவிடாது தடுக்கும் சக்திகளை முறியடிக்க வேண்டும்.

ஆக —

புதிய சோவியத்திற்குத் தலைமை ஏற்ற லெனின்செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக இருந்தன...

அனைத்தையும்—

வெற்றிகரமாகச் செயலாக்கத்தம் இறுதி மூச்சுவரை அவர் அயராது உழைத்தார்!

சோவியத் மக்கள்—புரட்சி நாளை நினைவு கூர்ந்து-கொண்டாடும் மகிழ்ச்சிப் பெருக்கில் நாமும் பங்குகொள்வோமாக!

இன்றைய காவல்துறை

ஒருவழக்கறிஞரின்மதிப்பீடு

காவல்துறையினரின் அத்துமீறல்களையும், சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகளையும் தமிழகம் அண்மைக் காலமாக மிகத் தெளிவாகக் கண்டு வருகிறது. சட்டம் — ஒழுங்கு — அமைதி காக்க வேண்டிய அவர்கள் எவ்வாறு அவைகளை 'உடைத்தெறிந்து' மக்களுக்கு விரோதமாகச் செயல்படுகிறார்கள் என்பதை பிற மாநிலத்தவரைவிட தமிழக மக்கள் நன்றாக அறிவார்கள். ஆக—இந்தியக் காவலர்கள், 'பயிர் மேயும் வேலிகளாக' எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பது குறித்து பி. பி. சர்மா என்ற வழக்கறிஞர் 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளிதழில் எழுதியுள்ளது இங்கு தரப்பட்டுள்ளது

நமது காவல்துறை அதிகாரிகளைப் பற்றி இந்நாள் வரை தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களில், கடுமையான கருத்துக்களே அதிகம். அவர்கள் ஒரு குழுவினராக ஒரு 'சாதி'யாக சேர்ந்து நின்று மக்களுக்குத் தீமைகள் செய்கிறார்கள் என்பதே பல நீதிபதிகளின் கருத்து.

ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் நமது நாட்டுக் காவல்துறையினரின் செயல்களையும், நடைமுறைகளையும், நீண்ட நாட்களாகவே கவனித்து வந்திருக்கிறேன். அந்த அனுபவங்களை வைத்துப் பார்க்கும்போது நம் நாட்டுக் காவல்துறை அதிகாரிகள் தங்களை ஒரு தனிச் சாதியினராகக் கருதிச் செயல்படுவதாகவே தீர்மானிக்கவேண்டியுள்ளது.

சாதிகளுக்கும் அவைகள் விளைவித்த கொடுமைகளுக்கும் இந்நாட்டில் குறைவே இல்லை. ஆங்கிலேயர் ஆண்ட போது ஏற்பட்டகாவல்துறை ஒரு தனி 'சாதியாக' உருவாகி தனது கடமையை மறந்துவிட்டு வெறும் 'போலீஸ் சாதி' வெறியுடன்தான் செயல்பட்டு வருகிறது. இந்நாள் வரை — விடுதலைப்பெற்று முப்பதாண்டுகள் ஆனபிறகும் இந்தப்புதியதீமைகளைந்தெறியப்படவில்லை!

காவலர்களுக்குள் பல சண்டை சச்சரவுகள் இருந்தபோதும் அத்துமீறல்களுக்காக அவர்களில் ஒருவர் மீது நடவடிக்கை எடுக்க முனைந்தால் அவரைக்காப்பாற்றவே எல்லாக் காவலர்களும் முயலுகிறார்கள், அதாவது அவர்களனைவரும் ஒன்று சேர்ந்து நீதியை வழிமறிக்கிறார்கள்!

"இந்திய சமுதாயத்தில் மிக மிக ஒற்றுமையாகத் திரண்டு சட்டத்தை ஒழித்துக் கட்டுபவர்கள் நம் நாட்டுக் காவலர்கள்தான்" என்று முன்பொருமுறை நீதிபதி ஏ என். முல்லா கூறியது முற்றிலும் உண்மையே.

ஒரு தையல்காரரை காவலர் ஒருவர் அடித்துவிட்டார் வழக்கை விசாரித்த நீதிபதி காவலருக்குத் தண்டனையாக ரூ. இருபத்தைந்து அபராதம் விதித்தார். இதை எதிர்பார்க்காத-காவலர்தரப்பில் வழக்கு நடத்திய இன்ஸ்பெக்டர் — 'போதிய அனுபவம் இல்லாத இந்த நீதிபதி இதன் விளைவை அனுபவிக்கப் போகிறார்' — என்று என்னிடம் தனிமையில் கூறினார்.

சில நாட்கள் கழித்து—

அந்த நீதிபதியின் வீட்டில் பொருட்கள் திருட்டுப் போய்விட்டன. திருடனைக் கண்டுப்பிடிப்பதில் காவலர்கள் துளி ஆர்வமும் காட்டவில்லை.

"இந்த நீதிபதி யாருக்காவது கடுமையான தண்டனை விதித்திருப்பார்...அவன்தான் திருடியிருக்கக்கூடும்..." எனப் பிறரிடம் காவலர்கள் சொல்லி வந்தார்கள்...

இதேபோல்—

கூடுதல் செசன்ஸ் நீதிபதி ஒருவர் ஒரு வழக்கின்போது காவல்துறை அதிகாரிகள் இழைத்த கொடுமைகளை நீதிமன்றத்தில் கடுமையாகச் சாடினார்.

அவருடைய வீடு சில நாட்களுக்குப்பின் 'யாரோ சிலரால்' கொள்ளையடிக்கப்பட்டது. அவர் அணிந்திருந்த வேட்டி - சட்டையைத் தவிர அனைத்துமே களவு போய்விட்டன...

நமது அரசாங்கங்களும் காவல்துறையின் கொடுமைகளுக்கு ஒருவகையில் ஒத்துழைப்பதாகவே எனக்குப் படுகிறது. பலஎடுத்துக்காட்டுகள் இருந்தபோதும், ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறேன்:

மத்திய சுங்கத் துறையிலிருந்த ஓர் அதிகாரி போலீஸ் சூப்பிரண்டெண்டாக எங்கள் பகுதியில் ஒருமுறைநியமிக்கப்பட்டார். கடமை உணர்வு கொண்ட அவர் பொதுமக்கள் என்றோ, காவலர்கள் என்றோ வேறுபாடு இல்லாது தவறிழைப்பவர்களைத்தண்டிப்பதில் தீவிரமாகப் பணியாற்றினார்; திருடர்களும், முரடர்களும் இருக்குமிடத்திற்குநடுஇரவில் தனித்துப் போவார்; அங்கேயே அவர்களைக் கைது செய்வார்; திடீரென்று, காவல்நிலையங்களைச் சோதனையிடுவார்; காரணமின்றிபொதுமக்களைத் துன்புறுத்துகின்ற, வழக்கின் விவரங்களை சரியாகப்பதியாத அதிகாரிகளைக் கண்டிப்பார்;

மக்களிடையேநல்லபெயர் எடுத்த அவரைக் கண்டு,'காக்கிச் சட்டை' அணிந்து அப்பாவி மக்களைத் துன்புறுத்தி வந்த காவலர்கள் நடுநடுங்கினர்கள்.

நமது 'பாரத புத்திரர்கள்' இந்நிலை நீடித்திருக்க விட்டுவிடுவார்களா, என்ன? அவர்கள் வழக்கமான இராமாயணப் பாணியில்—அந்த அதிகாரி குறித்து அவதூறைப் பரப்பினார்கள். யாரோ சில பெண்களை அவர் 'வைத்திருக்கிறார்' எனக் கதை கட்டி விட்டார்கள்.

ஒரு காவல் துறையே 'சாதி'யாக நின்று இராமநாம பஜனை பாட ஆரம்பித்தபிறகு-அரசும் தனக்கென்ன வந்தது என்று வாளா விருக்கும்போது அந்த அதிகாரி தனித்து நின்று என்ன செய்ய முடியும்?

அவர் அந்தப் பதவியிலிருந்து விலகி, பழைய பதவிக்கே மீண்டும் போய்விட்டார்! ஒரு நேர்மையான காவல் துறை அதிகாரியின் கதைக்கு இவ்வாறு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது!

போலீஸ் துறை' என்று சொல்லப்படும் நமது காவல்துறை, மக்களை ஒடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு ஆங்கிலேயரால் நிறுவப்பட்டது. அவர்கள் வெளியேறி, விடுதலை கிடைத்த பிறகும்—காவல் துறையினரின் நோக்கையும், போக்கையும் மாற்றியமைக்க வேண்டும் என்று நமது அரசு கருதவே இல்லை!...

அண்மையில் வெளிவந்துள்ள நீதி விசாரணைகள் அனைத்திலும் இந்த உண்மை தான் உறுதி செய்யப்பட்டுள்ளது.

நமது வாழ்வின் வேறு பல துறைகளைப் போலவே, காவல் துறையும் அடிப்படையிலேயே மிகப் பெரிய மாறுதல்களைப் பெற வேண்டியுள்ளது.

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 2500

ஆறுமாத சந்தா ரூ. 12-50

மூன்றுமாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பிரதிநிதி

கே. எம். ஜி. மாதவன்

11, புதுத்தெரு, மைலாப்பூர்

சென்னை — 4.

தமிழகம் கண்ட..) (3-ம் பக்கத் தொடர்ச்சி

அரும்பெரும் சாதனைகளையெல்லாம் புரிந்தனர்.

பனகல் அரசர், பொப்பிலி அரசர் சர், ஏ,டி. பன்னீர்செல்வம், சர். பி. டி. இராசன் சர். ஆர். கே. சண்முகம் போன்றவர்கள் முன்னோடிகளாக இருந்து கட்சியையும் ஆட்சியையும் நடாத்தி வரலாற்றில் புகழ் சேர்த்தனர்.

கம்யூனல் ஜி. ஓ என்னும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ ஏற்பாடு நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில்தான் ஏற்பட்டது. இன்றைக்கு உயர் நீதிமன்ற நீதிபதிகளாகவும், ஐ. ஏ. எஸ். ஐ. பி. எஸ். போன்ற உயர் பதவியாளர்களாகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட இன மக்கள் வீற்றிருக்கிறார்கள் என்றால், இந்த நிலைமை ஏற்பட்டதற்கு அடிப்படை அமைத்ததே நீதிக்கட்சி ஆட்சிதான்.

நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட சமூக நீதி ஏற்பாட்டை தகுதி – திறமை என்ற பேரால், உடைத்து நொறுக்கிவிடத் திரைமறைவில் நீண்ட காலமாக முயற்சிநடைபெற்று வருகிறது. அந்தச் சதிக்கு உடந்தையாகத்தான் இன்றைய தமிழக முதல்வர் எம். ஜி. ஆரும் அவ்வப்போது குரல் கொடுத்து வருகிறார்.

வகுப்பு அடிப்படையிலன்றி பொருளாதார அடிப்படையில் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்றும், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்குத்தகுதி – திறமையே அடிப்படையாக அமையவேண்டும் என்பதும் 'மேட்டுக்குடி' மக்களின் வாதமாகும். அவர்களின் பாட்டுக்குப் பின் பாட்டுப் பாடுபவராகத்தான் இன்றைய முதல்வர் அவ்வப்போது செயல்பட்டு வருகிறார்.

பெரியார் நூற்றாண்டு விழாக் கொண்டாடிக்கொண்டு — அண்ணாயிசமே கட்சியின் கொள்கை என்று அறிவித்துக் கொண்டு, பெரியார்—அண்ணா கொண்டிருந்த உயிர் மூச்சுக் கொள்கைகளுக்கு வேட்டு வைத்துக்கொண்டிருக்கும் ஒரு முதல்வரைத் தமிழ்நாடு பெற்றிருப்பது தமிழக வரலாற்றில் ஒரு களங்கம் என்பதைத்தவிர வேறென்ன கூற முடியும்?

நீதிக்கட்சி வழிவந்தவர்கள்தாம் நாம் என்று சொல்லிக் கொள்வதிலே பேரறிஞர் அண்ணாவும் பெருமைப்பட்டார்; கலைஞரும் பெருமைப்பட்டார். அண்ணாவும், கலைஞரும் நீதிக்கட்சி எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தைநிறைவேற்றவே தங்கள் ஆட்சிக் காலத்தில் அரும்பாடுபட்டனர். ஆனால் இன்றைய அரசிடம் அதனை எதிர்பார்க்க முடியுமா?

"நான் தேசிய பரம்பரையில் வந்தவன் தியாகிகள் பரம்பரையில் வந்தவன்" என்றெல்லாம் சமயம் வாய்க்கும்போதெல்லால் சொல்லி, தேசியவாதிகளிடம் 'சபாஷ்' பெற முயலும் எம். ஜி. ஆர், எப்படி தன்னை நீதிக் கட்சி வழிவந்தவன் என்று சொல்லிக்கொள்ள முடியும்?

நீதிக்கட்சியின் நிழலில் ஒண்டியவர்களைக் கூட இன்றைய அமைச்சர்கள் கண்டிருக்க முடியாது. திராவிட இயக்க வரலாறு அறிந்த ஒருவர் கூட இன்றைய அமைச்சரவையில் கிடையாது. அப்படி இருக்கும்போது, இந்த ஆட்சியைத் திராவிட இயக்க ஆட்சி என்று எப்படிச் சொல்ல முடியும்?

இன்றைய ஆளுங்கட்சியில் உள்ளஎத்தனை பேருக்கு கம்யூனல் ஜி. ஓ. பற்றித் தெரியும்? சேலம் மாநாட்டு நிகழ்ச்சியைத் தெரிந்து வைத்திருப்பவர்கள் எத்தனை பேர்? திருவாரூர் மாநாட்டுத் அரசியல் தீர்மானம் என்ன என்பதாவது தெரியுமா?

சினிமாவைப்பற்றிக் கேட்டால் சொல்லத் தெரியும்! எம். ஜி. ஆர். நடித்த படங்களை வரிசையாகச் சொல்வார்கள். அந்தப் படங்களில் யார் யார் கதா நாயகிகள் என்று கேட்டால் தட்டுத் தடங்கல் இல்லாமல் கூறுவார்கள். இதுதானே இன்றைய ஆளுங் கட்சி உறுப்பினர்களுக்கு உள்ள தகுதியே!

அரை நூற்றாண்டுக் காலத்துக்கு மேல் நம் முன்னோர்கள் அரும்பாடுபட்டு வளர்த்து வந்த இன வுணர்வையும் மொழியுணர்வையும் ஒழித்துக் கட்ட எதிரிகள் செய்த சதியின் விளைவாகவே இப்போது ஒரு கோமாளி நடிகரை முதல்வராகக் கொண்டுள்ள சினிமாக் கட்சியின் ஆட்சியில் நாம் குடிமக்களாக இருக்க நேர்ந்திருக்கிறது.

தமிழகத்தைக் கப்பியுள்ள 'இருள் விரைவில் நீங்கும். உதய சூரியன் ஒளி மீண்டும் பரவும்' உண்மையான திராவிட இன உணர்வு கொண்ட ஆட்சி மலரும். நீதிக் கட்சியின் வழி வந்த, தமிழினத் தலைவர் கலைஞர் தமிழக ஆட்சியின் தலைவராக அமரப் போகும் நாள் விரைவில் வரும் என்ற நம்பிக்கையோடு நமது தமிழகம் அன்று கண்ட 'நவம்பர்' புரட்சியை நினைவு கூர்வோம்'

காலத்தின் கட்டளை

பூபாகத்தின் புரையோடிப் போன வடக்கத்தித் தலைமைகள் வலிவிழந்து, வடிவிழந்து போய் விட்டன என்பதற்குத் தென்னகத்தில் எழுந்துள்ள திரமிக்க, தெளிவு மிக்க தலைமைகள் எழப் போகும் இந்தியப் புதுயுகத்தின் விடிவெள்ளிகள்!

மண்ணின் மைந்தர்கள் ஆண்ட மண்டிலங்கள் பல பல கொண்ட இலமூரியாக் கண்டம், பிரித்தாளும் சூழ்ச்சியிலே பேராற்றல் மிக்க ஐரோப்பியர்களின் சரக்குக் கப்பல்களுக்குத் தாள் திறந்ததும் அங்கே சண்டைக் கப்பல்கள் தளம் கொண்டதும், களம் கண்டதும். கொற்றம் அவர்கள் குடையின் கீழ் வந்ததும், துணைக் கண்டம் இந்தியா என்று பெயர் பெற்றதும் இருநூறு ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு பழங்கதை.

நல்லவையே செய்தாலும் அவர்கள் அந்நியரன்றோ; அவர்கள் ஆளுகையின் கீழ் வாழுவது பேதைமையன்றோ! எல்லா இடத்தும் நீக்கமற நிறைந்துவிட்ட அப்பொல்லா வகுப்பினரைப் புறங்காண எல்லா இனத்தாரும் ஓர் அணியில் நின்று எதிர்த்திடல் வேண்டுமன்றோ என்று காங்கிரசு இயக்கம் கண்டதும் அது புதிய வகைப் போராட்டத் தளம் பல அமைத்ததும் காலத்தின் கட்டாயம். 1947 ஆகஸ்ட் திங்கள் 15-ம் நாள் ஆங்கிலேயர் வெளியேறியது 31 ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு பழங்கதை

கொண்ட குறிக்கோள் குறைவின்றி நிறைவேறிய பின்னர் காங்கிரஸ் விடுதலை இயக்கத்தின் ஈடு இணையற்ற தலைவராய் விளங்கிய காந்தியார் காங்கிரசைக் கலைத்து விடச் சொன்னதும்' மத வெறிக் கும்பல் ஒன்று அவருக்கு மாணவாயிலைத் திறந்து விட்டதும் பின்னாளில் தொடங்கிய பெருங்கதையின் தொடக்க அத்தியாயம்.

போக்கிலே மாறுபட்டாலும் நோக்கிலேஒருமைப்பட்டாலும் எல்லாத் தரப்பினரின் முழு ஒத்துழைப்பையும் தள்ளாமல் பெற்றுக் கொண்ட காங்கிரசு இயக்கத்தை, பின்னாளில் கட்சியாகப் பாவித்தது, விடுதலைப் பெற்றுத் தந்தவர்கள் நாங்களே என்று பிரகடனப் படுத்திடதும் அந்த அரசியல் மோசடியை அடையாளம் கண்டு எடுத்துரைத்தவர், எதிர்த்துரைத்தவர் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் என்பதும். தெற்கத்தித் தலைவர்களின் தெளிவையும், துணிவையும் மன்பதைக்குணர்த்தும் மாற்றுக் குறையாத முதல் முத்திரைகள்'

கல்வி அறிவு சிந்தனைத் தெளிவில்லா இந்திய ஜனநாயகம் காங்கிரஸ் இயக்கத்தைக் கட்சியாக மாற்றிய அரசியல் மோசடிக்கு அங்கீகாரமும், மாநில அரசுகளையும் மத்திய அரசையும் ஆளும் அதிகாரத்தையும் காங்கிரசுக்கே அளித்தது. அந்த மாயப் பனித்திரையை 1957 – ல் தென்னகத்தில் கேரளத்தில் தோழர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு அமைத்த மாற்று அமைச்சரவை சற்றே விலக்கியது இதனைத் தாங்க முடியாத ஆளும் தகுதி தங்களுக்கே என்ற அகந்தை நிரம்பிய காங்கிரசின் வடக்கத்தித் தலைமை, அரசியல் சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைந்து நம்பூதிபாடு அமைச்சரவையை சம்காரம் செய்தனர், சமத்காரம் என்று ஆறுமாந்தனர். ஆனால் அடுத்துவரும் பூதாகாரமான கிடுக்கித் தாக்குதலில் தாங்கள்புறமுதுகிடட்போகிறுர்கள் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவேயில்லை

கல்வியிற் கரையிலா காஞ்சி நகர் தந்த பேரறிஞர் அண்ணாவின் புதிய அர்த்த சாஸ்திரத்தில் பூத்த புதிய

புதுக்கோட்டை
வெ. மதியழகன்
பி எஸ் ஸி

அஸ்திரம் வடக்கு வேலைகளுக்கு இடங்கொடாத இமாலய வெற்றியை 1967–ல் ஈட்டித் தந்தது. வடவர்களின் மேலாதிக்கத்திற்கு நடைபாதை விரிக்கும் மும்மொழித் திட்டம் தமிழகத்திற்குத் தேவையில்லை என்ற தென்னவர்கோன் அண்ணாவின் தெளிவும். தீர்க்கமும். துணிவும் மிக்க பிரகடனம் ஆதிக்கவாதிகளின் அஸ்தமனத்திற்கு அடிக்கோலியது

அண்ணாவின் வாரிசாக அடுத்து வந்த கலைஞர் அவர்கள் மமதை மிகு மத்திய காங்கிரசாருக்கு ஒரு சவாலாகவே விளங்கினார் நீடித்த நிலையான ஆட்சியைத் தமிழகத்திலே நடத்தி, ஆடிடும் பாவையல்ல மாநில முதல்வர்கள் என்று மத்திய ஆளும் வர்க்கத்தாருக்கு உணர்த்தி, மாநிலங்களுக்கு ஒரு மரியாதையை உருவாக்கியவர் கலைஞர் தான், இன்றைய இந்திய அரசியல் சட்டம் கொல்லைப்புற வழியாகக் கொண்டுவரப்பட்ட இரட்டையாட்சி முறைதான் என்ற அண்ணாவின் உயிலுக்கு உயிரூட்டி, அரசியல் அரங்கில் உலவ விட்டவர்கலைஞர் தான்.

நாமார்க்கும்குடியல்லோம் நமனை அஞ்சோம் என்ற பழைய இலக்கணத்திற்கு புதிய இலக்கியமாய் 'உறவுக்குக் கைகொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்று மாநில அரசுகளை கொச்சைப்படுத்தியவர்கள் தலையிலே நச்செனக் குட்டியவர் நமதுகலைஞர்தான்.

விளக்கிச் சொல்லத் தேவையில்லா இரண்டாம் விடுதலைப் போருக்கு முதற் குரல், முழுக் குரல், அமைப்பு ரீதியான அறைகூவல் தென்னகத்தில், விடுத்தவர் நமது கலைஞர்.

தீந்தமிழால் துணைக் கண்ட அரசியலை திசை எட்டும் அறியச் செய்யும் செந்நாப் புலவன் கூடுவிட்டு ஓடிவந்த பல கொள்கை வீரர்களை சாடு போகாவண்ணம்காப்பாற்றித் தந்த சரணாலயத்தின் ஞான பீடம், விழுப்புண்படாத நாளெல்லாம் வீணாள் வைக்கப்படும் என்ற வழுவாத பண்பாட்டை வாழும் தலைமுறைக்குணர்த்த தன் வாழ்வையே பயிற்சிக் கூடமாக்கி வரும் வரலாற்று நாயகன்; தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் இதழ் திறந்து நாவுதிர்த்த முத்தன்றோ. அது! அம்முத்தேவித்தாகி. வேலாகி, வாளாகி, சர்வாதிகார வியூகத்தைப் பிளந்த வழியாகி ஜனநாயகத்தின் வாகையாகிய வரலாறு, பழைய வரலாற்று நூலுக்கு புதிய அனுபந்த மன்றோ!

அலகாபாத் உயர்நீதிமன்றம் தன் தவறுக்களித்த தண்டனைக்கு அறுபது கோடி மக்களைத் தவறுகத் தண்டித்த அன்னை (?) இந்திரா அதிகாரத்திலிருந்து உருட்டிவிடப் பட்டுச் சிந்துவாரின் றிச்சிந்தை நொந்து, செய்வதறியாது புலம்பிட நேரத்து. அந்தவடக்கத்தித் தலைவியின் மறு அரசியல் பிரவேசத்திற்கு புதிய ராஜபாட்டை அமைத்துத்தர ஒரு தெற்கத்தித் தலைவர்தேவராஜ் அர்ஸ்தான் முடிந்தது.

கவிஞன் கீட்ஸின் வரிகளை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். மாரிக்காலம் வந்துவிட்டால், மனதுக்கிசைந்த வசந்தகால வருகை தொலைவிலா இருக்கிறது? அரசியல் மேகங்கள் தென்னகத்தில் மையங்கொண்டுவிட்டன. அது நலம் கொடுக்கும் பருவமழையாக பெய்தாலும், வளம் கெடுக்கும் புயற்காற்றாக தாக்கினாலும், துணைக்கண்டத்தின்புதிய வரலாறுதென்னகத்திலிருந்தே தென்னாட்டவராலேயே தீர்மானிக்கப்படும் இது சரித்திரக் கட்டாயம். காலத்தின் கட்டளை.

மாண்புமிகு முதல்வர் மரபை...) (2-ம் பக்கத் தொடர்ச்சி

கும் எண்ணமே அதில் பளிச்சிடக் காணலாம்

மது 'பர்மிட்' இல்லாத மானபுகள் குடிப்பதை நிறுத்தாத போக்கை ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பாலே உள்ளவர்கள் வேண்டுமானால் அறியாது போகலாம். அவரது எடுபிடி அமைச்சர்கள் எத்தனை பேர் குடிக்கிறார்கள் என்பதை முதல்வர் மூடி மறைத்தாலும் தமிழ்நாட்டுமக்களுக்குத்தெரியாதா?

செய்தியாளர்கள் கேள்விக்கணைகளை தொடுத்தபடி இருந்தனர். இந்திராகாந்திகொண்டு வந்த "நெருக்கடி நிலை" பற்றிய கேள்விக்கு திறமையாக பதில் சொல்வதாக நினைத்துக் கொண்டு திக்குமுக்காடியிருக்கிறார். நன்மையும், தீமையும் கலந்தேயிருந்தன என்றுகூறிய இவர் 'கட்டுப்பாடு' நெருக்கடி நிலை கொண்டு வந்தது என்று கூறுகிறார். அன்றைய கழக ஆட்சியைக்கலைத்ததைச் சுட்டிக்காட்டுகிறார். அதைத் தேர்தலின் தீர்ப்பு மூலம் மக்கள் ஏற்றுக்கொண்டதாக வாதாடிப் பார்க்கிறார்.

தேர்தல் காலத்தில் நாட்டில் உள்ள எல்லா எதிர்க்கட்சிகளின்எதிர்ப்பிற்கிடையே தான் தி. மு. கழகத்தை நாற்பத்து இரண்டு இலட்சம் மக்கள் ஆதரித்தனர். அன்றைய ஆட்சியை நடத்திய தலைவர் கலைஞரை நாட்டு மக்கள் ஊழல், இலஞ்சம் என்ற ஓங்காரக் கூச்சலிடையே தான் ஆதரித்து வெற்றிபெறச் செய்தனர்.

ஆறேழு கட்சிகளின் ஆதரவோடு ஆளும் கட்சியாகிவிட்ட அ. தி. மு. க. அதிகமாகப்பெற்ற வாக்குகள்பத்து இலட்ச தான் என்பதை நாடாள்வோர் மறந்தாலும நாடு மறந்துவிடவில்லை.

'நெருக்கடிநிலை' விளைவித்த கேடுகள் ஒன்றா, இரண்டா? எழுதிக் காட்டினால் ஏட்டில் அடங்காதே,

டில்லிப் பட்டணத்தின் ஒரு பகுதியில் வாழ்ந்து வந்த ஏழை மக்களின் நடுத்தர மக்களின் குடிசைகளையும், இல்லங்களையும 'புல்டோசர் கொண்டு தரைமட்டமாக்கியதை இந்தத் தரணி இதற்குள்ளாகவா மறந்துவிட்டது.

அந்தக் குடிசைவாழ் மக்களின் மீது போலீசை ஏவி தடிகொண்டு தாக்கியது மட்டுமின்றி துப்பாக்கிச் சூடு நடத்தியதும் நெருக்கடி நிலையின் போதுதானே!

குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயரால் திருமணம் ஆகாத இளைஞர்களைத் துன்புறுத்தி அறுவைச் சிகிச்சை செய்த அரசுதானே இந்திராவின நெருக்கடிகால அரசு! தேர்தல் தில்லுமுல்லுகளை எடுத்துக் காட்டி கூறிய தீர்ப்பையே குப்பைக் கூடையில் தூக்கி எறிய பயன்பட்டது தானே நெருக்கடி நிலை அரசு!

தனக்கு ஆகாதவர்கள் என்று கருதிய நாட்டின் பெருந் தலைவர்களை, தியாகிகளை, தொண்டர்களை சிறையிலே பூட்டி சித்திரவதை செய்த அரசு தானே அந்த நெருக்கடி நிலை அரசு.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த செயல் வீரர் சிட்டிபாபுவையும் அடித்துக் கொன்ற அரசு தானே நெருக்கடி நிலை அரசு? சிறையிலே அடைத்து சாத்தூர் பாலகிருஷ்ணனை சாகடிக்கக் காரமாக இருந்த அரசுதானே அந்த நெருக்கடி நிலை அரசு!

அன்றைய தினம் அம்மையாரின் மகனும் அவரைச் சார்ந்த நாலைந்து பேர் நாட்டிலே செய்த அக்கிரமங்கள் அநியாயங்கள் ஒன்றா! இரண்டா? இந்தச் சம்பவங்களெல்லாம் 'நெருக்கடி நிலையால் அல்லவா ஏற்பட்டது.

பத்திரிகைகளுக்குக் கடுமையான தணிக்கை. பேச்சுரிமைக்கு வாய்ப்பூட்டு கழகத்தைப்பற்றிய தவறான செய்திகளுக்கு அரசின்... அமோக ஆதரவு.

அனைத்துக்கும் மேலாக காழ்ப்புணர்ச்சி காரணமாக நெருக்கடி நிலையைப்பயன்படுத்தி கழக ஆட்சியைக் கலைத்தது நெருக்கடி நிலை அரசுதானே! அதுநியாயந்தான் என்று நிலை நாட்டப் பார்க்கிறனம். ஜி. இராமச்சந்திரனை எவ்வளவு பெரிய எத்தன் என்று நாடு எண்ணிப் பார்க்கிறது ஏளனம் புரிகிறது!

'நெருக்கடி நிலை கூடாது' மிசா சட்டம் திரும்பப் பெற வேண்டும், ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும் என்று ஓங்கிக் குரல் கொடுத்தார் அன்றைய தமிழ் நாட்டின் முதலமைச்சர் கலைஞர். அந்தக் காரணத்திற்காக அல்லவா நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி கழக ஆட்சியைக் கலைத்தது.

'இந்த நெருக்கடி நிலை' நாட்டிற்குக் கொண்டு வந்த நன்மைகள்தான் என்ன? நெருக்கடி நிலை, மிசா சட்டம் கொண்டு வந்த இந்திராவின் அரசை நாட்டு மக்கள் தூக்கி எறியவில்லையா'

இதையெல்லாம் எம். ஜி. இராமச்சந்திரன் மறந்துவிட்டுப் பேசுகிறாரா? அல்லது மறைத்து விட்டுப் பேச முயல்கிறாரா? என்பது தெரியவில்லை.

இன்றும் கூட எம். ஜி. ஆர் ஆட்சியில் பத்திரிகைகளுக்குக் கெடுபிடி முரசொலி அலுவலகத்தில் சோதனை, அலை ஓசை பத்திரிகையை மூடும் முயற்சி. மக்கள் செய்திப் பத்திரிகை அலுவலகத்தில் சோதனை இவ்வளவும்செய்து வருகிற மக்கள் விரோத அரசு அதனைத்தலைமை ஏற்று நடத்தி வருகிற நடிகர் இராமச் சந்திரன் பத்திரிகையின் உரிமைகளை தான் பறிக்க முயலவில்லை என்று பகிரங்கமாக பச்சைப் பொய்யைப் பேசுகிறார்.

இந்திராவின் நெருக்கடி நிலை ஆட்சிக்கு நியாயம் கற்பிக்கிற பேர் வழி இந்திரா ஆட்சி தான் தேவை என்று சொல்லாமல் சொல்ல முயற்சிக்கிறார்!

ஜனதாவின் மத்திய ஆட்சிக்கு அ தி மு க வின் ஆதரவு உண்டு என்பதும் கர்நாடகத்தில் இந்திராவை ஆதரிப்பதும் என்ன அரசியல் தந்திரமோ புரியவில்லை.

திரைப்படத்தில் போடும் இரட்டை வேடங்களை அரசியல் அரங்கிலும் போட்டு நடிக்கிறார். அவருடைய முகத்திரை கிழியும் நாள் விரைவாக ...வரத்தானே போகிறது,

இலண்டனில் வரவேற்புக்குப் பதில் அளித்த நடிகர் கலைஞரைத் தாக்கிப் பேசியிருக்கிறார். தன நாட்டு அரசியல் பற்றிஅவதூறு கூறும் ஒரு அசிங்கமனிதன்இவரைத்தவிர வேறு யாராக இருக்க முடியும்.

அரசியல் மரபு காக்க வேண்டிய ஒரு முதல்வர் இப்படி அநாகரிகமாக நடந்து விட்டாரே என்று மக்கள் ஆயாசப்படுகிறார்கள்; அதிர்ச்சி அடைகிறார்கள்.

முதலமைச்சராக இருந்த அண்ணா மேலை நாடுகளில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

மத்திய அரசின் ஆட்சி பற்றிக்கேட்ட கேள்விக்கு அழகான பதில் சொன்னார் 'நேர்த்தியான ஆட்சி நடை பெறுகிறது'' என்று தெளிவாக பதில் கூறினார்.

கழகத் தலைவர் கலைஞர் முதல்வராக இருந்த போது மேலை நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டநேரத்தில் செய்தியாளர்களைச் சந்திகதத் தவறவில்லை. அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அண்ணா பாணியிலேயே கலைஞர் பதில் உரைத்து மரபைக் காத்து நாட்டின் மதிப்பையும் உயர்த்தினார்.

அண்ணாவின் பெயரை ஆயிரம் முறை உச்சரிப்பவர் மரபை மறந்தது ஏனோ?

புனித ராஜ்யம்..
(முதற் பக்கத் தொடர்ச்சி)

உள்ளே எட்டிப் பார்க்கலாமா?

நொண்டி: கொஞ்சம்பொறுமையா இருங்க அண்ணுச்சி...

அண்ணுச்சி: பொறுக்கமுடியலேடா!... புத்தப் புதுசுன்னு வேற சொல்லிட்டாளே!... படங்கள்ள தானே பாத்ரூம் சீனைப் பாத்திருக்கிருேம். இப்ப நேராவே பாக்கிறசான்சு கிடைச்சிருக்கு. அதை மிஸ் பண்ணலாமா?... டே! டே அந்த மேஜையைத் தூக்கி இங்கபோடு அதுமேலநாற்காலியைப் போட்டு நான் அந்த ஜன்னல் வழியா எட்டிப் பாக்கிறேன்...



நொண்டி: வேண்டாம் அண்ணுச்சி... இப்பவே நம்ப மூணுமூணு ஆளா இருக்கோம்... மேஜை நாற்காலி தாங்காது...

அண்ணு: டே... போடுறியா இல்லையா?

(நொண்டி. 'சரிசரி' என்று தலையில் அடித்துக்கொண்டு மேஜையை இழுத்து பாத்ரூம் கதவருகே ஓரமாகப் போட்டு அதன் மீது நாற்காலியையும் தூக்கி வைக்கிருன். அண்ணுச்சி, நொண்டியைப் பிடித்துக் கொண்டே மேஜையில் ஏறி, நாற்காலியில் ஏறி நின்றுகொண்டு குளியலறையின் மேல் உள்ள ஜனனல் வழியாக உள்ளே பர்க்க முனேகிருன். அதற்குள் குளியலறைக் கதவு படார் எனத் திறக்கப்பட்டு பேய்க் கூச்சல் போட்டுக்கொண்டு சுந்தரி வெளியே வருகிருள். அவள் முகமெல்லாம் கரி பூசப்பட்டிருக்கிறது. தலைவிரி கோலமாக இருக்கிறது. கறுப்புப் புடவை உடுத்தியிருக்கிருள். கரி பூசப்பட்ட முகத்தில் தீட்டப்பட்டுள்ள வெள்ளைக் கோடுகள் பயங்கரமாக இருக்கின்றன. கையில் ஒரு துடைப்பக் கட்டை இருக்கிறது. அவள் ்பாட்ட கூச்சலிலும், ஆடிய பயங்கர ஆட்டத்திலும் அதிர்ச்சியடைந்த அண்ணுச்சி நாற்காலியிலிருந்து அலறியடித்துக் கொண்டு கீழே விழுகிருன்... நொண்டி, அங்குமிங்கும் ஓடுகிருன்...பேயுருவத்தில் இருக்கும் சுந்தரி, ஆவேசமான மெட்டில் பாடிக்கொண்டேஅவர்களைத் துரத்தித்துரத்தி அடிக்கிருள்)

சுந்தரி: (பாடுதல்)

காளியடா நான்—உங்களைக்
கசக்கிப் பிழிவேண்டா!
படபத்திர காளியம்மா...
உங்களை பஸ்பமா ஆக்கிடுவேன்!
புனிதராஜ்யத்துப்
புண்ணியவான்களே!...
உங்க தோலை உரிப்பேண்டா!...
உடம்பைத் துவையல் செய்து
தின்பேண்டா!...
நீங்க வச்சதுதான் சட்டமா?
போட்டதுதான் திட்டமா?...
என் சக்திக்கு முன்னுலே
நீங்க சந்தியிலே நிப்பீங்க!...
காளிகாதேவியடா நான் உங்களைக்
கசக்கிப் பிழிவேண்டா!...
குண்டர்படைத் தலைவர்களே'...
உங்க குடலைக் கிழிப்பேண்டா!...
குடிகார தடியர்களே! உங்க
உயிரைக் குடிப்பேண்டா!...

(பேய் வேடத்தில் இப்படி சுந்தரி பாடிக்கொண்டே அவர்களை விரட்டுகிருள். அடிக்கிருள். அவர்கள் கதவைப்போய் முட்டுகிருர்கள்... நீண்ட நேரப் போராட்டத்துக்குப்பிறகு, கதவு திறக்கப்படுகிறது, பாலம்மாள் பதைபதைப்புடன் உள்ளே வருகிருள் அண்ணுச்சியும் நொண்டியும் ஓடி விடுகிருர்கள்.

(13 வது காட்சி முடிகிறது)

— தொடரும் —

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோரின் வேதனை துடைப்பீர்!

கழக உடன்பிறப்புக்களுக்கு கழகத்தலைவர் கலைஞர் வேண்டுகோள்!

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் கழக உடன்பிறப்புக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு;

தமிழகத்தில் பெரும் மழையினுலும், மலைப்பாறைச் சரிவுகளினுலும் தஞ்சை, உதகை, கோவை, திருச்சி, தென ஆற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களிலும், வேறு சில பகுதிகளிலும் முதியோர், இளைஞர், குழந்தைகள், தாய்மார்கள் சுமார் இருநூறுபேர் உயிரிழந்தார்கள் என்ற செய்தி கேட்டுத் தாங்கமுடியாத வேதனைக்கு ஆளானேன்.

இயற்கையின் சீற்றம் சென்ற ஆண்டினைப்போலவே இந்த ஆண்டும் பல உயிர்களைக் கொள்ளை கொண்டு விட்டது. அவர்களைப் பறிகொடுத்துக் கண்ணீர் வடிக்கும் குடும்பங்களுக்கு, கழகத்தின் சார்பில் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாதிக்கப்பட்டோருக்குத் துயர் துடைப்புப் பணிகளை நிறைவேற்றுவதில் கழக உடன்பிறப்புக்கள் இடையருது ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முப்பெரும் தத்துவ டாலர் செயின்கள்

மேற்படி டாலர்கள் குழந்தைகள் முதல் ஆண்கள், பெண்கள் அனைவரும் கழுத்தில் அணிந்து கொள்ளலாம். முழு ரூபா அளவு உள்ள இந்த டாலர்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. ஒவ்வொரு டாலருக்கும் மறுபுறம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணுவின் "மணிவாசகம்" பொறிக்கப்பட்டது. ஒரு டாலர் விலை ரூ. 15. டாலர் செயின் 24 இன்சி நீளம் உள்ள ஒரு செயின் விலை ரூ. 35. தபால் செலவு தனி. உங்களுக்கு எந்த டாலர் வேண்டுமென்பதை தெளிவாக எழுதி டாலர் மட்டும் வேண்டுமானுல் ரூ. 3 அட்வான்சும். செயினுடன் டாலர் வேண்டுமானுல் ரூ. 10 அட்வான்சும் அனுப்பினுல் மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் பொருளை V. P. P. மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர்: சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
"போட்டோ வீனஸ்" 104, C.N.K. ரோட், சென்னை-600 005.
(ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு.கருணுநிதி அவர்களால். அழகிரி அச்சகத்தில் (156 சூரியநாராயணசெட்டி தெரு ராயபுரம் 6.00013) அச்சிட்டுவெளியிடப்பட்டது நிர்வாக அலுவலகம், 'அன்பகம்'508 அண்ணுசாலை, தேனும்பேட்டை சென்னை-600018 தொலைபேசி: 441009